போயிற்று. தீவிரமாகச் சுடர் விடும் ஓர் யுவதியின் உருவம், அப்பாவிப் பெண்ணின் கூச்சம் மண்டிய இளமை துளும்பும் உருவை மறைத்துக்கொண்டு பளிச்சிட்டது. விநோதினி யுடன் 'விஷ விருக்ஷம்' என்ற புத்தகத்தைப் பிடுங்கி விளை யாடியதே அவன் கண்முன் தோன்றியது. சாயங்காலம் விநோதினி 'கபாலகுண்டலா' படித்துச் சொல்லுவாள். மெல்ல இருட்டாகிவிடும். வீட்டிலுள்ளவர்கள் தூங்கி விடுவார்கள். இரவில் தனிமையான அறையில் நிச்சப்தத்தில் விநோதினியின் குரல் ஒரு தீவிரத்தில் ஒலித்துத் தாழ்ந்து கொண்டே வந்து அடைத்துவிடும் நிலைக்கு வரும். சட் டென்று அவள் புத்தகத்தை எறிந்துவிட்டு, சமாளித்துக் கொண்டு எழுந்திருப்பாள். 'வா, உன்னைப் படிக்கட்டு வரை யில் கொண்டு விடுகிறேன்' என்பான் மகேந்திரன். இந்த நினைவுகள் எல்லாம் மாறிமாறி அவன் மனத்தில் எழுந்து அவனைப் புளகம் கொள்ளச் செய்தன. இரவு நேரமாகிக் கொண்டே போயிற்று. இப்போது ஆசா வந்துவிடுவாளென்ற சந்தேகம் அவனுக்கு இருந்தது. ஆனால் ஆசா வரவில்லை. 'என் கடமையை நிறைவேற்ற நான் காத்திருந்தேன். ஆனால் ஆசா வீண் கோபத்துடன் வரவில்லை என்றால், நான் என்ன செய்வது?' என்று எண்ணி அவன் விநோதினியின் நினைவி லேயே இரவைக் கழிக்க முற்பட்டான்.

கடிகாரத்தில் மணி ஒன்றடித்த பின், இருக்க முடிய வில்லை. கொசு வலையைத் தள்ளிக்கொண்டு எழுந்தான் மகேந்திரன். வெளியே மாடி முற்றத்தில் வந்தபோது கோடைக் காலத்தின் நிலவு தோய்ந்த இரவு மிகவும் இனிமை யைப் பயந்தது. கல்கத்தாவெங்கும் பரவிய மோனமும் துயிலும், ஒலி அடங்கிய கடல் நீர்போல் தொடக்கூடிய பொருளாகவே தோன்றின. எண்ணற்ற மாடங்களின் உச்சிகளின்மேல், அப்பெரு நகரின் துயிலைக் கவிந்துகொள் வதுபோல் காற்று மெல்ல வீசிக்கொண் டிருந்தது.

பல நாட்களாக மனத்தினுள் அடங்கிக் கிடந்த ஆசையை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆசா காசியிலிருந்து திரும்பியதுமுதல் விநோதினி அவன் கண்களில் படவில்லை. நிலவு ஒளிரும் நிச்சப்தமான இரவு, மதுபோல் அவனை மயக்கி விநோதினியின் அறைப்பக்கம் தள்ளிச் சென்றது. மகேந்திரன் படிக்கட்டுகளில் இறங்கினான். விநோதினியின் அறையெதிரே வராந்தாவில் வந்து பார்த்தான். அறை அப்போதும் மூடி யிருக்கவில்லை. உள்ளே நுழைந்தபோது, படுக்கை விரித் திருந்ததே தவிர அதில் எவரும் படுத்திருக்கவில்லை. அறையி னுள் அடி ஓசை கேட்கவே, அறையின் வலது புக்கம்

திறந்த வராந்தாவிலிருந்து விநோதினி, ''யாரது?'' என்றாள்.

மகேந்திரன் உணர்ச்சி மிகுந்த குரலில் மெதுவாக, ''விநோத்! நான்தான்'' என்றவாறு வராந்தாவுக்கே வந்தான்.

கோடைக்கால இரவு; வராந்தாவில் கம்பளத்தை விரித்துக் கொண்டு விநோதினியுடன் ராஜலட்சுமி படுத்திருந்தாள். ''மகேன்! இந்த நடுராத்திரியில் நீ இங்கு வருவானேன்?'' என்றாள் அவள்.

விநோதினி தன் கரிய புருவங்களின் கீழேயிருந்து அவனைத் தீயெழ நோக்கினாள். மகேந்திரன் பதில் பேசாமல் வேகமாக அங்கிருந்து சென்றான்.

32

மறு நாள் காலை முதலே கார்மேகம் வானில் கவிந்திருந்தது. சில நாட்கள் தாங்க முடியாத வெப்பத்துக்குப் பின் குளிர்ந்த கருமுகில்கள் எங்கும் நிறைந்திருந்தன. அன்று மகேந்திரன் வெகு சீக்கிரமாகவே காலேஜுக்குச் சென்றுவிட்டான். அவன் கழற்றிய உடைகள் தரைமீது அவ்வாறே கிடந்தன. ஆசா, மகேந்திரனுடைய அழுக்குத் துணிகளை ஒவ்வொன்றாக எண்ணிக் கணக்கு எழுதிக்கொண்டு வண்ணானுக்குப் போட்டாள்.

மகேந்திரனுக்கு இயல்பாகவே ஞாபகமறதியும் அஜாக்கிரதையும் அதிகம். அதற்காகச் சலவைக்குப் போடுமுன் கால் சட்டையின் பைகளைச் சோதனை செய்யுமாறு ஆசாவிடம் அவன் சொல்லியிருந்தான். மகேந்திரனுடைய அழுக்குச் சட்டையின் பை ஒன்றில் கைவிடும்போது கடிதம் ஒன்று அவள் கையில் அகப்பட்டது. அந்தக் கடிதம் விஷப் பாம்பாகி ஆசாவின் விரல்களை அப்போதே கடித்துவிட்டிருந்தாலும் நன்றாக இருந்திருக்கும். ஏனென்றால், கொடிய நஞ்சு உடலினுள் சென்றால் ஐந்து நிமிடங்களிலேயே அதன் கடைசிப் பலன் வெளிப்பட்டு முடிவும் ஏற்பட்டுவிடும். ஆனால் உள்ளத்தினுள் புகும் நஞ்சோ மரணவேதனையைத் தருமே தவிரச் சாவை அளிக்காது.

கடிதம் திறந்திருந்தது. விநோதினியின் கையெழுத்துத்தான் அது. கணநேரத்தில் அவள் முகம் வெளுத்துப்

போயிற்று. கடிதத்தைக் கையில் எடுத்துக்கொண்டு அவள் பக்கத்து அறைக்குச் சென்று படிக்கலானாள்.

"நேற்று இரவு நீங்கள் செய்த காரியத்திலாவது உங்களுக்குத் திருப்தி உண்டாகவில்லையா? இன்று மறுபடியும் க்ஷேமியின் மூலம் ரகசியமாக எனக்குக் கடிதம் ஏன் அனுப்ப வேண்டும்? சீ! அவள் என்ன எண்ணிக்கொண்டாளோ! உலகில் எவரிடமும் முகம் காட்ட முடியாதவாறு செய்து விடுவீர்கள்போல் இருக்கிறதே! என்னிடம் உங்களுக்குத் தேவையானது என்ன? இந்தப் பிச்சைக்காரத்தனம் எதற்கு? பிறவி முதலே அன்பும் பரிவும் பெற்று வாழும் உங்களுக்கு இன்னமும் திருப்தி ஏற்படவில்லையா?

"உலகில் காதலிக்கவோ, காதலைப் பெறவோ எனக்கு யாதோர் உரிமையும் இல்லை. அதனால் காதலின் வேதனையை விளையாட்டின் மூலம் தணித்துக்கொள்ளப் பார்க்கிறேன். உங்களுக்கு ஓய்வு இருந்தபோது அந்த விளையாட்டில் நீங்களும் கலந்துகொண்டீர்கள். ஆனால் விளையாட்டிற்கும் முடிவு உண்டல்லவா! அறையினுள் உங்களுக்கு அழைப்பு வந்தாயிற்று. பின்னரும் என் விளையாட்டு அறைக்குள் நுழைவது ஏன்? புழுதியைத் தட்டிவிட்டு அறைக்குச் செல்லுங்கள். எனக்கு வீடு கிடையாது. மனத்துக்குள் தனியாக விளையாடிக் கொள்கிறேன். உங்களைக் கூப்பிட மாட்டேன். என்னைக் காதலிப்பதாக நீங்கள் எழுதியிருந்தீர்கள். விளையாடும்போது அந்தச் சொல்லைக் கேட்கலாம். ஆனால் உண்மையில் அதை நான் நம்பவில்லை. முன்பு நீங்கள் ஆசாவை நேசித்ததாக எண்ணியதும் பொய்; இப்போது என்னைக் காதலிப்பதாக நினைப்பதும் பொய். உங்களுக்கு உங்கள்மேலேயேதான் காதல்.

"காதல் தாகத்தினால் என் இதயம் முதல் மார்பு எங்கும் வதங்கிவிட்டது. அந்தத் தாகத்தைத் தணிக்கும் வல்லமை உங்களுக்கு இல்லை. அதை நான் பூரணமாகக் கண்டு கொண்டேன். என்னைத் துறந்துவிடுங்கள். என் பின்னால் சுற்ற வேண்டாம் என்று பல முறை சொல்லுகிறேன். கூச்சமின்றி என்னையும் அவமானப்படச் செய்தீர்கள். எனக்கும் விளையாடும் ஆவல் தீர்ந்துவிட்டது. இப்போது அழைத்தாலும் என் பதில் கிடைக்காது. என்னைக் கல்நெஞ்சுக்காரி என்று கடிதத்தில் குறிப்பிட்டிருந்தீர்கள். அது உண்மையாக இருக்கலாம். ஆனால் எனக்கும் ஓரளவு பரிவு உண்டு. அதனால்தான் தயை கூர்ந்து உங்களைத் தியாகம் செய்து விட்டேன். இதற்குப் பதில் கிடைத்தால், உங்களை விட்டு ஓடாவிட்டால் என்னால் தப்ப முடியாது என்றுதான் நான் நினைக்கவேண்டி வரும்."

கடிதத்தைப் படித்ததும், கண நேரத்துக்கு ஆசாவுக்குத் தன்னைச் சுற்றி இருந்த ஊன்றுகோல்கள் யாவும் விலகிவிட்டன போன்ற உணர்ச்சி மூண்டது. உடலெங்கும் நரம்புகள் சட்டென்று தளர்ந்தன. மூச்சுவிடத் தூய காற்றுக்கூட இல்லைபோல் அவளுக்குத் தோன்றியது. சூரியனும் அவள் கண்ணெதிரே தன் ஒளிக்கிரணங்களை மறைத்துக்கொண்டானே! சுவர், அலமாரி, நாற்காலி இவைகளை மாறி மாறிப் பிடித்தவாறு ஆசா தரையில் விழுந்துவிட்டாள். கண நேரம் கழிந்தபின் நினைவு பெற்றுக் கடிதத்தை மீண்டும் படிக்க முயன்றாள் அவள். ஆனால் பித்தம் பிடித்த நிலையில் அவளால் அதன் பொருளைப் புரிந்துகொள்ள முடியவில்லை. கறுப்பு எழுத்துக்கள் அவள் கண்முன் தாண்டவமாடின. இதென்ன! இது எவ்வாறு நடந்தது? முற்றும் பாழாகிவிட்டதே! என்ன செய்வது, யாரை அழைப்பது, எங்குச் செல்வது - ஒன்றுமே அவளுக்கு விளங்கவில்லை. நீரிலிருந்து கரையில் போட்ட மீன் போல் அவளது உள்ளமும் துள்ளித் துடித்தது. மூழ்கும் ஆள் ஏதாவது பிடித்துக்கொள்ள அகப்படுமா என்று கைகளை உயரத் தூக்கித் துழாவுவதுபோல், ஆசாவும் தன் உள்ளத்தினுள் பிடித்துக்கொள்ள ஓர் ஆதாரத்தைத் தேடி அலைந்தாள். கடைசியில் மார்பைக் கைகளால் அழுத்திக்கொண்டு மேல் மூச்சு வாங்க, ''பெரியம்மா!'' என்று அரற்றினாள்.

அந்த அன்புக் களஞ்சியத்தின் பெயரை உச்சரித்ததுமே அவள் விழிகளில் நீர் ஊற்றெடுத்தது. தரையில் உட்கார்ந்து அவள் ஓயாது அழுதாள். அழுகை ஓயவும், அவள், 'இந்தக் கடிதத்தை என்ன செய்வது?' என்று யோசித்தாள். தன்னிடம் இது இருப்பது தெரிந்தால் கணவர் எவ்வளவு கூச்சப்படுவார் என்று நினைக்கும்போது அவள் மிகவும் குன்றிப் போனாள். அந்தக் கடிதத்தை அதே அழுக்குச் சட்டைப் பைக்குள் வைத்துக் கொடியில் மாட்டிவிடுவது, அதைச் சலவைக்குப் போடக்கூடாது என்ற முடிவுக்கு வந்தாள் ஆசா.

ஆசா கையில் கடிதத்துடன் படுக்கை அறைக்குள் வந்தாள். இதற்குள் வண்ணான் அழுக்குத் துணி மூட்டையில் சாய்ந்தவாறு உறங்கிவிட்டிருந்தான். அழுக்குச் சட்டையின் பையினுள் கடிதத்தைப் போட முயலும்போது, ''அடியம்மா'' என்ற குரல் கேட்டது. பரபரவென்று ஆசா கடிதத்தைக் கட்டிலின்மேல் போட்டுவிட்டு அதன்மேல் உட்கார்ந்து கொண்டாள். அறையினுள் வந்ததுமே, ''வண்ணான் ரொம்பவும் துணிகளை மாற்றிவிடுகிறான். குறியிடாத துணிகளை நான் எடுத்துப்போகிறேன்'' என்றாள் விநோதினி.

ஆசா, விநோதினியின் முகத்தைப் பார்க்கவில்லை. முகத்

தின் மாறுதலினால் விஷயம் தெளிவாகிவிடுமே என்று அவள் சாளரத்தின் பக்கம் முகம் திரும்பி வெளியே வானத்தை நோக்கியவாறு இருந்தாள். கண்களில் நீர் வந்துவிடுமோ என்று அவள் உதட்டை அழுத்தமாகக் கடித்துக்கொண்டாள்.

விநோதினி ஒரு முறை திடுக்கிட்டுப் போய் ஆசாவை உற்று நோக்கினாள். "ஓ! புரிகிறது! நேற்று இரவு நடந்தது உனக்கு எட்டிவிட்டதுபோல் இருக்கிறது! என் மேல்தான் கோபமெல்லாம்! தவறு முழுவதும் என்னுடையதா என்ன!" என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள் அவள். விநோதினி ஆசாவுடன் பேச முயற்சி செய்யவில்லை. சில துணிகளைப் பொறுக்கி எடுத்துக்கொண்டு அறையிலிருந்து கோபமாகச் சென்றாள்.

விநோதினியுடன் மிகவும் நட்புரிமை பாராட்டி வந்தோமே என்ற கூச்சம், ஆழ்ந்த வேதனை நடுவிலும் ஆசாவின் உள்ளத்தைக் கவிந்துகொண்டது. மனத்தினுள் தோழியைப் பற்றி எண்ணியவற்றுக்கும் இந்தக் கடிதத்துக்கும் உள்ள தொடர்பைப் பார்க்க அவளுக்கு ஆசை பிறந்தது.

அவள் கடிதத்தைத் திறந்து பார்க்கும்போது மகேந்திரன் பரபரவென்று உள்ளே நுழைந்தான். திடீரென்று ஏதோ எண்ணம் வரவே காலேஜில் ஒரு பாடம் நடக்கும்போது நடுவே எழுந்து வீட்டுக்கு ஓடி வந்துவிட்டான் அவன்.

ஆசா, கடிதத்தைத் தலைப்பினுள் மறைத்துக்கொண்டாள். மகேந்திரனும் அறையினுள் ஆசாவைக் கண்டு சற்றுத் திகைத்து நின்றான். பிறகு அறையில் இங்குமங்கும் ஆவலுடன் பார்வையைச் செலுத்தினான். மகேந்திரன் தேடுவது என்ன என்று ஆசாவுக்குத் தெரியும். ஆனால் கையிலுள்ளதைச் சட்டைப் பையில் தெரியாமல் எப்படி வைத்துவிட்டு ஓடுவது என்று அவளுக்குத் தோன்றவில்லை.

மகேந்திரன் அழுக்குத் துணிகளை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்தான். மகேந்திரன் அவ்வாறு வீணாகத் தேடுவது கண்டு ஆசாவினால் கம்மென்றிருக்க முடியவில்லை. அவள் கடிதத்தையும் சட்டையையும் தரையில் எறிந்துவிட்டு இடது கையால் கட்டில் காலைப் பிடித்துக்கொண்டு அதன்மேல் முகம் கவிந்தபடி இருந்தாள். மகேந்திரன் மின்னல் வேகத்தில் கடிதத்தை எடுத்துக்கொண்டான். கணநேரம் கம்மென்று ஆசாவை நோக்கினான். சற்று நேரத்துக்கெல்லாம் அவன் மாடிப் படிகளில் திபுதிபுவென்று ஓடும் ஒலி ஆசாவுக்குக் கேட்டது. அப்போது வண்ணானும் கூப்பிட்டான்: "அம்மா! துணி போட இன்னும் எத்தனை நேரந்தான் ஆகும்! பொழுதோ ஏறிப் போவுது; என் வீடு இங்கே இல்லையே, அம்மா."

33

ராஜலட்சுமி அன்று காலை முதலே விநோதினியை அழைக்கவில்லை. விநோதினி வழக்கம்போல் உக்கிராண அறைக்குச் சென்றாள். அங்கு ராஜலட்சுமி அவளைத் தலை நிமிர்ந்து பார்க்கவில்லை,

அவள் அதைக் கண்டுகொண்டாள். ''அத்தை, உனக்கு ஏதாவது உடம்பா என்ன?..வரத்தானே செய்யும்? நேற்று ராத்திரி உங்கள் பிள்ளை செய்த வேலை வேறு! பைத்தியக் காரர் போல் அல்லவா வந்து நின்றார்! அப்புறம் எனக்குத் தூக்கமே வரவில்லை'' என்றாள் விநோதினி.

ராஜலட்சுமி முகம் திருப்பிக்கொண்டாள். அதற்குப் பதில் ஏதும் அவள் கூறவில்லை.

''ஆசாவுடன் சின்ன விஷயத்துக்காக ஏதாவது சச்சரவு மூண்டிருக்கும். அதை யார் கவனிப்பது? அப்போதே குற்றச் சாட்டு. அதைத் தீர்த்து வைக்க நான் போயே தீரவேண்டும்; விடியும் மட்டுங்கூடப் பொறுக்காது. என்னதான் சொல்லுங் கள், அத்தை, நீங்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது; உங்கள் பிள்ளைக்கு எவ்வளவு குணங்கள் இருந்தாலும், பொறுமை மட்டும் சிறிதாவது இல்லை; அதனால்தான் என்னுடன் சண்டை மூண்டுவிடுகிறது.''

''அம்மா! நீ பொய் பேசுகிறாய்; எனக்கு இன்று எதுவும் பிடிக்கவில்லை.''

''எனக்குங்கூட எதுவும் பிடிக்கவில்லை, அத்தை! உங்கள் மனம் நோகுமே என்றுதான் பொய் சொல்லி உங்கள் பிள்ளையின் குற்றத்தை மூடப் பார்த்தேன். ஆனால் விஷயம் இவ்வளவு தூரம் வந்தபின் மூடுவது முடியாதுதான்.''

''என் பிள்ளையின் குற்றங் குறைகள் எனக்குத் தெரியும். ஆனால் நீ இவ்வளவு பெரிய மாயக்காரி என்பதுதான் எனக் குத் தெரியாமல் போய்விட்டது!'' என்றாள் ராஜலட்சுமி.

விநோதினி ஏதோ பதில் கூற வாயெடுத்தாள்; அடக்கிக் கொண்டாள். ''அது 'உண்மைதான், அத்தை! எவருக்கும் இன்னொருவரைப் புரிந்துகொள்வது முடியாதுதான். சொந்த மனசுகூட எல்லாருக்கும் புரிந்து விடுகிறதா? நீங்கள் ஒரு நாள் மருமகளின் மேலுள்ள வெறுப்பினால் இந்த மாயக்காரியைக் கொண்டு உங்கள் பிள்ளையின் மனத்திற்கு ஆறுதல் அளிக்கச் சொல்லவில்லையா? சற்று யோசித்துப் பாருங்கள்!'' என்றாள் அவள்.

ராஜலட்சுமி எரிந்து விழுந்தாள்: ''அடி நாசக்காரி!

பிள்ளைக்காகத் தாய்மீது இப்படிக் குற்றமா சாட்டுகிறாய்? உன் நாக்கு அழுகிவிடாதா!''

விநோதினி சற்றும் தயங்கவில்லை. ''அத்தை, நாமெல்லாம் மாயாவினிகள். என்னுள் இருந்த மாயம் உன் கண்ணுக்குப் பட்டதே தவிர எனக்குத் தெரியவில்லை. உங்கள் உள்ளத்தினுள் இருக்கும் வஞ்சகம் உங்களுக்குத் தெரியாது. ஆனால் எனக்கு நன்றாகப் புலனாகிறது. ஆனால் மாயை இருக்கிறது. அது இராவிட்டால் இவ்வாறு நடக்கவே முடியாது. நான் ஓரளவு தெரிந்தும் ஓரளவு புரியாமலும் வலை விரித்தேன். நீங்களுங்கூட, ஓரளவு அறிந்தும் ஓரளவு புரியாமலும் சூழ்ச்சி செய்தீர்கள். நமது இனத்தின் சுபாவமே இதுதான். நாமெல்லாம் மாயக்காரிகள்'' என்றாள் அவள்.

கோபத்தில் ராஜலட்சுமியின் தொண்டை அடைத்துக் கொண்டது. அவள் வாய் திறவாமல் வேகமாக அறையிலிருந்து வெளிச் சென்றாள். விநோதினி அறையினுள் தனியே நின்றாள். அவளுடைய விழிகளில் தீச்சுடர் தெறித்தது.

காலைப்பொழுது வேலைகள் முடிந்ததும், ராஜலட்சுமி மகேந்திரனைக் கூப்பிட்டனுப்பினாள். முதல் நாள் இரவு நிகழ்ச்சிகளைப் பற்றித்தான் விசாரணை நடக்கும் என்று மகேந்திரனுக்குப் புரிந்தது. விநோதினியின் கடிதம் வேறு கிடைத்ததில் அவன் மனம் அல்லல் கொண்டிருந்தது. அந்தத் தாக்குதலுக்கு எதிராக அவனுடைய இதய அலைகள் விநோதினியின் பக்கமாகவே வேகமாய் ஓடின. இதற்குமேல் தாயிடம் பதில் வேறு சொல்லுவது அவனால் முடியாது. விநோதினி விஷயமாகத் தாய் ஏதாவது கோபமாகச் சொன்னால், புரட்சி செய்யும் அவன் மனம் உண்மையான வரலாறுகளை வெளிப்படுத்திவிடும். அதன் பின் குடும்பத்தில் குழப்பம் நேரிடாமல் இராது. ஆகவே, இந்த வேளை வீட்டைவிட்டுத் தொலைவில் போய் எல்லாவற்றையும் யோசித்துப் பார்ப்பது அவசியம். மகேந்திரன் வேலையாளைக் கூப்பிட்டு, ''அம்மாவிடம் சொல்லு, எனக்குக் காலேஜில் அவசியமான வேலை இருக்கிறது. இப்போதே போகவேண்டும். திரும்பி வந்து பார்க்கிறேன் என்று சொல்'' என்றதும், ஓடிச் செல்லும் சிறுவனைப்போல் உடைகளை அணிந்து சாப்பிடாமலேயே வெளியே சென்றான். இளம்பிள்ளை போல விநோதினியின் அந்தக் கொடிய கடிதத்தைக் காலை முதல் பல தடவை படித்தான்; சட்டைப் பையிலேயே வைத்துக்கொண்டு திரிந்தான். கடைசியில் பரபரப்பில் கடிதத்துடனேயே சட்டையைக் கழற்றி எறிந்துவிட்டு அவன் வெளியே போய்விட்டான்.

ஒரு பாரல் மழை பெய்து அப்போது வானம் மூட்டமாக

இருந்தது. விநோதினியின் மனம் அச்சமயம் வெறுத்துக் கிடந்தது. மனம் சரியாக இராவிட்டால் அவள் அதிகமாக வேலைகளை இழுத்துப் போட்டுக்கொள்வது வழக்கம். அதனால் தான் அழுக்குத் துணிகளைச் சுமந்து வந்து குறியிடும் வேலையைத் தொடங்கினாள். ஆசாவிடம் துணிகளை வாங்கி வரச் சென்றபோது அவளுடைய முகமாறுதலைக் கண்டதும் விநோதினியின் மனம் பின்னும் கசந்தது. உலகில் குற்றவாளியாகவே இருந்தாலும், அந்தக் குற்றத்தின் தண்டனைகளை மட்டுந்தானா அநுபவிக்கவேண்டும்? அதனால் வரும் இன்பங்களைமட்டும் ஏன் பெறாமல் வஞ்சிக்கப்படவேண்டும்?

சோவென்று மழை பொழியத் தொடங்கியது. விநோதினி தன் அறையினுள் தரையில் உட்கார்ந்திருந்தாள். எதிரே குவியலாகத் துணிகள் கிடந்தன. வேலைக்காரி க்ஷேமி ஒவ்வொன்றாகத் துணிகளை எடுத்துத் தரவும் விநோதினி குறியிடும் மசியினால் அவைகளில் எழுத்துக்களைப் பொறித்துக் கொண்டிருந்தாள்.

மகேந்திரன் ஓசைப்படுத்தாமல் கதவைத் திறந்து கொண்டு அறையினுள் நுழைந்தான். க்ஷேமி வேலையைப் போட்டுவிட்டுத் தலையை முசுக்கினால் மூடியவாறு அவ்வறையை விட்டு வெளியே சென்றாள். விநோதினி மடியிலிருந்த துணியைக் கீழே போட்டுவிட்டு மின்வேகத்தில் எழுந்து நின்றாள். "போங்கள், என் அறையைவிட்டு உடனே போய்விடுங்கள்!" என்றாள்.

"ஏன், நான் என்ன செய்தேன்?" என்றான் மகேந்திரன்.

"என்ன செய்தீர்கள்! கோழை!..கையால் ஆகாதவர்! என்ன செய்ய முடியும் உங்களால்? காதலிக்கத் தெரியுமா, அல்லது கடமையையாவது செய்யத் தெரியுமா? வீணாக என் பெயரை நாலு பேர் முன் நாசமாக்குகிறீர்கள்?"

"நான் உன்னைக் காதலிக்கவில்லை, என்றா சொல்கிறாய்?"

"ஆம். அவ்வாறுதான் சொல்லுகிறேன். கண்ணாமூச்சி, ஒளிப்பாட்டம், ஒரு முறை இப்படி, ஒரு தடவை அப்படி! திருடன் போல் இந்த நடத்தையைக் கண்டு எனக்கு வெறுப்பே மூள்கிறது; எனக்கு இது பிடிக்காது! நீங்கள் போகலாம்."

"நீ என்னை வெறுக்கிறாயா, விநோதினி?" என்று உருகும் குரலில் கேட்டான், மகேந்திரன்.

"ஆம். வெறுக்கத்தான் வெறுக்கிறேன்."

"இன்னும் பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டிய பொழுது கிடக்கிறது. விநோத், நான் தயங்காமல் எல்லாவற்றையும் துறந்து செல்வதானால் என்னுடன் வர உனக்குச்

சம்மதமா?'' என்று மகேந்திரன் விநோதினியின் கைகளை அழுத்தமாகப் பிடித்துத் தன் அருகில் இழுத்துக்கொண்டான். ''விடுங்கள். எனக்கு வலிக்கிறது'' என்றாள் விநோதினி.

''வலிக்கட்டும். சொல்: என்னுடன் நீ வருவாயா?''

''மாட்டேன். வரமாட்டேன். ஒருகாலும் முடியாது.''

''ஏன் வரமாட்டாய்? நீதான் என்னை இவ்வளவு தூரம் பாழ் நிலைக்குக் கொண்டுவந்தாய். இன்று இப்படி என்னை விட்டுச் செல்ல முடியாது. நீ வரத்தான் வேண்டும்'' என்று அவன் அவளைத் தன் மார்பில் அணைத்துப் பிடித்துக் கொண்டான். ''உன் வெறுப்பும் என்னைத் தடுக்கமுடியாது. உன்னை அழைத்துச் செல்லத்தான் போகிறேன். எவ்வாறேனும் சரி, நீ என்னைக் காதலிக்கத்தான் வேண்டும்.''

விநோதினி பலவந்தமாகத் தன்னை விடுவித்துக் கொண்டாள்.

''சுற்றுமுற்றும் தீயை எழுப்பிவிட்டாய்; இனி அதை அணைக்கவும் முடியாது; நீ ஓடவும் முடியாது'' என்றதும் அவனுடைய குரல் ஓங்கியது. ''ஏன் இவ்வாறு விளையாடினாய்? விநோத்! இனி இதை விளையாட்டு என்று சொல்லித் தப்பிவிட உன்னால் முடியாது. இப்போது உனக்கும் எனக்கும் ஒரே விதமான மரணந்தான்.''

ராஜலட்சுமி உள்ளே வந்தாள். ''மகேன்! என்னடா சொல்கிறாய்?'' என்றாள்.

மகேந்திரனுடைய வெறி நோக்கு ஒரு முறை மட்டுமே தாயின் பக்கம் திரும்பியது. பின்னர் அவன் மீண்டும் விநோதினியின் பக்கம் பார்த்தான். ''நான் எல்லாவற்றையும் துறந்து செல்லப் போகிறேன். சொல்; என்னுடன் வருகிறாயா?'' என்றான்.

ரோஷம் கொதிக்க நிற்கும் ராஜலட்சுமியின் முகத்தை விநோதினி ஒரு முறை நோக்கினாள். பின்னர்த் தயங்காமல் மகேந்திரனுடைய கையைப் பிடித்துக்கொண்டாள். ''வருகிறேன்'' என்றாள்.

மகேந்திரன், ''சரி; இன்று பொறுத்துக்கொள். நான் வருகிறேன். நாளைமுதல் உன்னைத் தவிர வேறு எவரும் கிடையாது'' என்று சொன்னான்.

இதே சமயம் வண்ணான் அங்கு வந்து, ''அம்மணி! இன்னும் காத்திருக்க என்னால் முடியாது. இன்று ஒழிவு இராவிட்டால் சொல்லுங்கள், நாளைக்கு வந்து துணி எடுத்துப் போகிறேன்'' என்றான்.

க்ஷேமி வந்து, ''அம்மா! கொள் ஆகிவிட்டதாம்: குதிரைக்காரன் சொன்னான்'' என்றாள்.

விநோதினி ஏழு நாட்களுக்கு வேண்டிய கொள்ளை லாயத்துக்கு அனுப்புவாள். தானே சாளரத்தில் நின்று குதிரை தின்பதையும் கவனிப்பது வழக்கம்.

வேலைக்காரன் கோபாலன் வந்து, ''அம்மா! வேலைக்காரப் பயல் ஜடுதாத்தா (ஸாதுசரண பாபு)வுடன் சண்டை போட்டான். மண்ணெண்ணெய்க் கணக்குத் தீர்ந்ததுமே குமாஸ்தாவிடம் சம்பளத்தை வாங்கிக்கொண்டு போகிறானும்..சொன்னான்'' என்றான்.

குடும்பத்தின் மற்ற அலுவல்கள் யாவும் முன் போலவே நடந்தன.

34

விஹாரி இதுவரை வைத்தியக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். பரீட்சைக்குச் சற்று முன்னேதான் அதை விட்டுவிட்டான். யாரேனும் இது குறித்து வியப்புக் காட்டினால்; ''பிறருடைய உடல் நலத்தைப் பின்னர்க் கவனிக்கலாம். இப்போதைக்கு என் உடம்பை நான் பார்த்துக்கொள்ள வேண்டுமே!'' என்பான் அவன்.

ஆனால் உண்மை இதுதான்: விஹாரியின் முயற்சி சற்றும் சளைக்காதது; ஏதாவது ஒன்று செய்யாமல் இருக்க அவனால் முடியாது. ஆனால் புகழைத் தேடியோ, பணத்துக்காகவோ. பிழைப்புக்காகவோ, வேலையைத் தேடிப் போக அவனுக்குத் தேவை ஏற்படவில்லை. கல்லூரியில் பட்டம் பெற்றதும் அவன் எஞ்சினீயரிங் கற்கும் எண்ணத்துடன் சிவபுரத்துக்குச் சென்றான். கற்றுக்கொள்ள ஆவல் இருந்த அளவு - எடுத்துக்கொண்டதை முடிக்கும் அளவு- கற்றதும் மருத்துவக் கல்லூரியினுள் புகுந்தான். மகேந்திரன் ஓராண்டு முன்னதாகவே பட்டம் பெற்று மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தான். கல்லூரியில் வங்க மாணவர்களிடையே அவ்விருவருடைய நட்பும் பிரபலமாகியிருந்தது. அவர்கள் இவ்விருவரையும் சயாமிய (ஒட்டிப் பிறந்த) இரட்டையர் என்று கேலி செய்வது வழக்கம். சென்ற ஆண்டு மகேந்திரன் தவறிவிடவே, இருவரும் ஒரே வகுப்பில் சேர்ந்து கொண்டனர். இந்தச் சமயத்தில் இந்த இரட்டையரிடையே பிளவுக்கு மூலகாரணம் என்னவென்று மற்ற மாணவர்களுக்கு விளங்கவில்லை. தினமும் எங்கே சென்றால் மகேந்திரன் நிச்சய

மாகத் தென்படுவானே, அங்கே விஹாரி செல்வதையே நிறுத்திவிட்டான். மகேனின் கண்ணில் படக்கூடாது என்பது அவன் விருப்பம். விஹாரி நன்ருகத் தேறிப் பூரிசுகளும் பெறக்கூடியவன் என்று யாவருக்கும் தெரியும். ஆனுல் அவனே பரீட்சைக்குச் செல்லவே இல்லே!

அவர்களுடைய வீட்டின் பக்கத்தில் ஒரு குடிசையில் ராஜேந்திர சக்கரவர்த்தி என்ற ஓர் ஏழை அந்தணர் இருந்தார். அச்சகத்தில் எழுத்துக் கோக்கும் தொழிலில் மாதம் பன்னிரண்டு ரூபாய் பெற்று வாழ்ந்தார் அவர். விஹாரி அவ்ரை அழைத்து, ''உங்கள் பிள்ளேயை என்னிடம் விடுங்கள்! நானே அவனுக்குப் படிப்புச் சொல்லித் தருகிறேன்'' என்ருன்.

அந்தப் பிராம்மணருக்கு நிம்மதியாகப் போயிற்று. களிப்புடன் அவர் தம் எட்டு வயதுச் சிறுவன் வசந்தனே விஹாரியிடம் ஒப்படைத்துவிட்டார்.

விஹாரி தன் சொந்தப் பாணியில் பையனுக்குக் கல்வி புகட்டத் தொடங்கிஞன். 'பத்து வயதுக்கு முன்ஞல் புத்தகம் படிக்கச் சொல்லக் கூடாது. எல்லாம் வாய்ப் பாடமாகவே சொல்லித் தர வேண்டும்' என்று அவன் வசந்தனுடன் ஆடுவதும், உலாவச் செல்வதும், மியூஸியம், மிருக சாலே, சிவபுரத் தோட்டம் எங்கும் சுற்றிக் காட்டுவதுமாய், நாட்களேக் கடத்திஞன். வாய்ப் பாடமாக ஆங்கிலம் கற்றுத் தருவது, சரித்திரக் கதைகள் சொல்வது, பலவிதமாகச் சிறுவனின் உள்ள மாறுதல்களேச் சோதித்து முடிவைக் காண்பது இவ்வாறே அவன் பொழுது கழிந்தது. ஒரு நிமிடங்கூட அவன் ஓயமாட்டான்.

அன்று சாயங்காலம் வெளியே செல்ல முடியாமல் இருந்தது. பிற்பகலில் நின்றிருந்த மழை மறுபடியும் தொடங்கிவிட்டது. விஹாரி இரண்டாவது மாடியில் பெரிய அறையினுள் விளக்கேற்றி வசந்தனுடன் தனது புதுமுறைப் போதனேயின் விளேயாட்டில் ஈடுபட்டிருந்தான்.

''வசந்தா! இந்த அறையின் கூரையில் எத்தனே வரிச்சில்கள், சொல் பார்க்கலாம்...எ்ண்ணக் கூடாது!''

''இருபது.''

''தவறு, பதினெட்டு.''

சட்டென்று சாளரத்தின் கம்பிகளே எண்ணிக்கொண்டான் விஹாரி. ''சட்டென்று சொல்; இந்தச் சாளரத்தில் எத்தனே கம்பிகள்?'' என்று சாளரக் கதவை மூடிஞன்.

''ஆறு.''

''சரியாகச் சொன்ஞய். இந்தப் பெஞ்சு எவ்வளவு நீளம்?

இந்தப் புத்தகத்தின் எடை என்ன?'' என்றெல்லாம் விஹாரி கேட்டுச் சிறுவனின் புலன்களுடைய அறிவை வளர்க்கும் பொழுது வேலைக்காரன் வந்தான். ''பாபுஜீ! ஒரு பெண்..'' என்றான்.

அவன் முடிப்பதற்குள்ளாகவே விநோதினி அறையினுள் வந்துவிட்டாள்.

''இதென்ன, மன்னி!'' என்று விஹாரி வியப்புடன் கேட்டான்.

''உங்கள் வீட்டில் உங்கள் உறவுப் பெண்களே எவரும் இல்லையா?'' என்றாள் விநோதினி.

''உறவினரும் இல்லை. வெளியாரும் கிடையாது. அத்தை ஒருத்தி ஊரில் இருக்கிறாள்.''

''சரி, உங்கள் ஊருக்கு என்னை அழைத்துச் செல்லுங்கள்.''

விஹாரி, ''என்னவென்று அழைத்து செல்வது?'' என்றான்.

விநோதினி, ''வேலைக்காரி என்று சொல்லுங்கள். அங்கு வீட்டு வேலைகள் செய்கிறேன்'' என்றாள்.

விஹாரி, ''அத்தைக்குக் கொஞ்சம் வியப்பாகத்தான் இருக்கும். வேலைக்காரி வேண்டுமென்று அவள் எனக்குச் சொல்லவில்லையே! முதலில் சொல்: உனக்கு இந்த முடிவு தோன்றக் காரணம் என்ன?..வசந்தா! போ; நீ போய்ப் படுத்துக்கொள்'' என்றான்.

வசந்தன் போய்விட்டான். ''வெளி நிகழ்ச்சிகளைக் கேட்டு நீங்கள் உள்மர்மத்தைத் தெரிந்துகொள்ள முடியாது'' என்றாள் விநோதினி.

''தெரியாவிட்டால் போகிறது; தவறாகத்தான் புரிந்து கொள்கிறேன். அதனால் நஷ்டம் ஒன்றுமில்லையே!''

''சரி; தவறாகத்தான் எடுத்துக்கொள்ளுங்களேன். மகேன் என்னைக் காதலிக்கிறார்.''

''அது புதிய செய்தி அல்லவே! அதுவும் இரண்டாவது முறை கேட்கும்படியான செய்தியும் அல்ல.''

''திரும்பத் திரும்பச் சொல்ல எனக்கும் விருப்பம் இல்லை. அதற்காகத்தான் உங்களிடம் வந்திருக்கிறேன். அடைக்கலம் கொடுங்கள்.''

''உனக்கு இஷ்டம் இல்லையா? இந்தக் கஷ்டங்களைத் தோற்றுவித்தது யார்? மகேந்திரன் சென்ற பாதையிலிருந்து அவனை வழுவச் செய்தது யார்?''

''நான்தான் செய்தேன். உங்களிடம் ஒளிக்க மாட்டேன். இதெல்லாம் என்னுடைய கைவேலைதான். நான் கெட்டவளாகவே இருந்தாலும் சரி, ஒரு முறை என்னைப்போல் இருந்து

பார்த்து உள்ளத்தை உணர்ந்துகொள்ள முயற்சி செய்து பாருங்கள். என் உள்ளத்தில் எரியும் தீயினால் மகேனுடைய வீட்டைப் பொசுக்கினேன். ஒரு முறை மகேனை நான் காதலிப்பதாகவும் எண்ணினேன். ஆனால் அது தவறு.''

''காதலிப்பவள் தீப் பற்றவைப்பாளா?''

''விஹாரி பாபு! இது உங்கள் சாஸ்திரங்கள் சொல்லும் பேச்சு. இப்போது அதையெல்லாம் கேட்கும் அளவுக்கு எனக்கு அறிவு இல்லை. உங்கள் புத்தகத்தை வைத்துவிட்டுத் தெய்வம்போல் என் உள்ளத்தினுள் இருப்பதைப் பாருங்கள். என்னிடம் உள்ள நல்ல, கெட்ட குணங்களை உங்களிடம் சொல்ல விரும்புகிறேன்.''

''ஆசைப்பட்டா புத்தகத்தை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறேன்! இதயத்தைக் கொண்டு உணரும் பொறுப்பைத் தெய்வமே ஏற்றுக்கொள்ளட்டும். நாங்கள் புத்தகத்தை ஓர் ஆதாரமாகக் கொண்டுதான் நடக்கவேண்டும். இராவிட்டால் கடைசியில் தடுக்க முடியாதபடி போய் விடும்.''

''கேளுங்கள், விஹாரி பாபு! நான் கூச்சத்தை விட்டுச் சொல்லுகிறேன். நீங்கள் என்னைத் திரும்பி அனுப்பலாம். மகேன் என்னை நேசிப்பது உண்மைதான். ஆனால் அந்த முட்டாள், குருட்டு மனிதர், என்னைச் சரிவரப் புரிந்துகொள்ள வில்லை. நீங்கள் என்னைப் புரிந்துகொண்டதாக ஒரு சமயம் எனக்குத் தோன்றியது. ஒரு முறை என்னைக் கௌரவிக்கவும் செய்தீர்கள். உண்மையாகச் சொல்லுங்கள்: அதை இன்று மறைக்கத் தேவை இல்லை.''

''உண்மையாகவே, நான் உன்னைப்பற்றி உயர்வாகத் தான் எண்ணினேன்.''

''நீங்கள் செய்தது தவறல்ல. ஆனால் என்னைப் புரிந்து கொண்டு கௌரவித்த நீங்கள் அத்துடன் நிற்கக் காரணம் என்ன? என்னை நேசிக்க என்ன தடை இருந்தது உங்களுக்கு? நான் வெட்கமின்றி உங்களை அணுகியிருக்கிறேன். நீங்களும் என்னைக் காதலித்திருக்கலாமே! என் தலையெழுத்து, நீங்களுங் கூட ஆசாவின் காதலில் மூழ்கிவிட்டீர்களே! நீங்கள் கோபம் கொள்ளக்கூடாது. உட்காருங்கள். உங்களிடம் எதையும் மறைத்துச் சொல்லவில்லை. நீங்கள் ஆசாவை நேசிப்பது உங்களுக்கே தெரியாவிட்டாலுங்கூட எனக்கு நன்கு தெரியும். ஆனால் ஆசாவிடம் நீங்கள் அப்படி என்ன கண்டீர்களென்று தான் எனக்கு விளங்கவில்லை. நல்லதோ, கெட்டதோ அவளிடம் என்ன இருக்கிறது? ஆண்களின் கண்ணோக்குடன் உள்ளத்தைப் பார்க்கும் திறனைப் பெண்களுக்கு ஏனோ தெய்வம்

அளிக்கவில்லை. நீங்கள் எதைக் கண்டு இவ்வளவு தூரம் கவனித்து ஏமாந்துபோகிறீர்களோ, குருடர்கள்!..''

விஹாரி எழுந்து நின்றான். ''இன்று நீ என்னிடம் சொல்ல வேண்டியதையெல்லாம் சொல், கேட்கிறேன். ஆனால் பேசத் தகாத பேச்சுக்களையெல்லாம் சொல்லாதே! உன்னிடம் நான் கேட்டுக்கொள்ளும் ஒரே வேண்டுகோள் இதுதான்'' என்றான்.

''விஹாரி பாபு! உங்களுக்கு எந்த இடத்தில் தாக்குகிறது என்பது எனக்குத் தெரியும். ஆனால் நான் எவரிடமிருந்து கௌரவம் ஏற்றேனோ, எவருடைய காதலைப் பெற்றால் என் வாழ்வே உய்யுமோ, அந்த ஒருவரிடம் இன்றிரவு பயம், கூச்சம் எல்லாவற்றையும் துறந்து ஓடி வந்திருக்கிறேன்! எவ்வளவு மனக் கஷ்டத்துடன் வந்திருப்பேன் என்று எண்ணிக்கொண்டு சற்றுப் பொறுமையாயிருங்கள். ஆனால் நீங்கள்மட்டும் ஆசாவைக் காதலித்திராவிடில் என்மூலம் ஆசாவுக்கு இவ்வளவு தூரம் கஷ்டம் ஏற்பட்டிராது.''

விஹாரியின் முகம் மாறியது. ''ஆசாவுக்கு என்ன? நீ அவளுக்கு என்ன செய்துவிட்டாய்?'' என்றான்.

''மகேன் நாளைக்குக் குடும்பத்தைத் துறந்து என்னுடன் போய்விடத் தீர்மானம் செய்துவிட்டார்.''

விஹாரி திடுமென உறுமினான்: ''ஒருகாலும் நடக்காது! ஒருகாலும் நடக்க முடியாது!''

''ஒருகாலும் முடியாதா! மகேனை இன்று யாரால் தடுக்க முடியும்?''

''உன்னால் ஆகும்.''

விநோதினி சற்று நேரம் கம்மென்று இருந்தாள். பின்னர் விஹாரியின் முகத்தையே உற்று நோக்கினாள். ''எவருக்காக நான் தடுக்க வேண்டும்? உங்கள் ஆசாவின் பொருட்டாகவா? எனக்கென்று சுக துக்கங்கள் இல்லையோ? உங்கள் ஆசா நன்றாக இருக்க வேண்டும் என்று இந்த வாழ்வில் என் உரிமைகளை எல்லாம் அழித்துவிடுமளவுக்கு நான் அவ்வளவு நல்லவளல்ல! தர்ம சாஸ்திரங்களை அவ்வளவு தூரம் நான் படித்தவளல்ல. நான் அப்படித் துறந்தால் அதற்குப் பதிலாக என்ன கிடைக்கும் எனக்கு?'' என்றாள்.

விஹாரியின் முகம் வரவரக் கடுமையாகியது. ''நீ எத்தனையோ விஷயங்களைத் தெளிவாகச் சொல்லத் துணிந்துவிட்டாய்! இப்போது நானும் ஒன்று சொல்லுகிறேன்: அன்று நீ செய்தது, இப்போது சொல்லுவது இவைகளில் பெரும் பகுதி நீ படித்த இலக்கிய நூல்களிலிருந்து திருடியது. இதில் முக்கால் பங்கு நாடகம், நவீனந்தான்!''

''நாடகமா! நவீனமா!''

''ஆம்; நாடகம், நவீனந்தான்! அதுவும் உயர்தரமல்ல. இதெல்லாம் உன் சொந்த எண்ணமென்று நினைக்கிறாய். அது அவ்வாறல்ல. இது முற்றும் அச்சேறியுள்ளவற்றின் எதிரொலி. நீ ஒன்றும் அறியாத அப்பாவிச் சிறுமியாக இருந்தாலும் குடும்பத்தாரின் பரிவில் குறைவு ஏற்பட்டிராது. ஆனால் நடிகை நாடக மேடைமீதுதான் நன்றாக இருப்பாள். வீட்டில் அவளுடன் வாழ்வது நடக்காது.''

விநோதினியின் அந்தத் தீவிரமான தைரியமும் அடங்காத கர்வமும் போன இடம் தெரியவில்லை. மந்திரத்தால் கட்டுண்ட பாம்புபோலத் தலை குனிந்து அடங்கி நின்றாள். வெகு நேரம் சென்ற பின்னர், விஹாரியின் முகத்தை நோக்கி அமைதியான குரலில், ''நீங்கள் என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்?'' என்றாள்.

''அபூர்வமாக எதையும் செய்ய விரும்பாதே! சாதாரணப் பெண்டிரின் தூய மனம் விரும்புவதைச் செய். ஊருக்குப் போய்விடு.''

''எப்படிச் செல்வது?''

''பெண்கள் வண்டியில் ஏற்றி நான் உன்னை உங்கள் ஊர் ரெயில் நிலையம்வரை கொண்டுவிட்டு வருகிறேன்.''

''அப்படியானால் இன்றிரவு இங்கேயே இருக்கலாம் அல்லவா!''

''இல்லை, அவ்வளவு நம்பிக்கை எனக்கு என்மேல் இல்லையே!''

இதைக் கேட்டதும் விநோதினி சட்டென்று தரையில் விழுந்து விஹாரியின் கால்களை மார்பில் அழுத்திக்கொண்டாள். ''இந்தப் பலவீனத்தையாவது வைத்துக்கொள்ளுங்கள், விஹாரி பாபு! ஒரேயடியாகக் கல் தெய்வம்போல் தூய்மை அடைந்துவிட வேண்டாம். இழிந்தவளைச் சற்று நேசித்து ஓரளவு உங்கள் தூய்மை குறைந்தாலும் பரவாயில்லை'' என்று அவள் விஹாரியின் பாதங்களை முத்தமிட்டாள். விநோதினியின் இந்த எதிர்பாராத செய்கையினால் கண நேரம் விஹாரியினால் தன்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவனுடைய உடலும் மனமும் சோர்வுற்றன. அவனுக்கு மூண்ட தளர்வைக் கண்டு விநோதினி கால்களை விட்டுவிட்டு முழந்தாளிட்டு, நிமிர்ந்து நாற்காலியில் உட்கார்ந்திருந்த அவனுடைய கழுத்தைக் கட்டிக்கொண்டாள். ''என் வாழ்வின் செல்வமே! எனக்கு என்றென்றும் சொந்தமல்ல நீங்கள். ஆனால் இன்று சிறிது நேரமாவது என்னை நேசியுங்கள். பின்னர் அந்தக் காட்டகத்தை நாடி நான் போகிறேன். எவரிடமும் எதையும்

கேட்க மாட்டேன். சாகுமளவும் மனத்தில் நிறுத்திக்கொள்ள எனக்கு ஏதாவது கொடுங்கள்'' என்றதும் விநோதினி தன் இதழ்களை மெல்ல விஹாரியின் முகத்தினருகே கொண்டு சென்றாள். கணநேரம் இருவரும் அசைவற்று இருந்தார்கள். அறையினுள் நிச்சப்தம் நிலவியிருந்தது. பின்னர்ப் பெருமூச்சுடன் விஹாரி கைகளை விடுவித்துக்கொண்டு மெல்ல இன்னொரு நாற்காலியில் உட்கார்ந்தான். அவனுடைய குரல் அடைத்திருந்தது. அதை ஒருவாறு சரிப்படுத்திக்கொண்டு, ''இன்றிரவு ஒரு மணிக்கு ஒரு பாஸஞ்சர் வண்டி இருக்கிறது'' என்றான்.

விநோதினி சற்று நேரம் மௌனமாக இருந்த பின்னர், தெளிவற்ற குரலில், ''நல்லது; அந்த வண்டியிலேயே போகிறேன்'' என்றாள்.

இந்த வேளையில் காலில் செருப்போ, உடம்பில் சட்டையோ இராமல் வசந்தன் பளிச்சென்று சிவந்த உடலுடன் விஹாரியின் நாற்காலியருகில் வந்து விநோதினியை உற்று நோக்கினான்.

''படுத்துக்கொள்ளச் சொன்னேனே!'' என்றான் விஹாரி. வசந்தன் பதில் ஏதும் கூறாமல் அங்கேயே நின்றான்.

விநோதினி தன் கைகளை நீட்டினாள். முதலில் சற்றுத் தயங்கிய வசந்தன் மெல்ல அவளருகில் சென்றான். விநோதினி தன் கரங்களால் அவனை அணைத்துக்கொண்டு கண்ணீர் பெருக அழத் தொடங்கினாள்.

35

நடக்க முடியாததும் நிகழ்ந்துவிடுகிறது. பொறுக்க முடியாததுகூடச் சகித்துப் போய்விடுகிறது. இராவிடில் மகேந்திரனுடைய வீட்டில் அன்றைய இரவு கழிந்தே இராது. விநோதினியைத் தயாராக இருக்கச் சொல்லிவிட்டு, மகேந்திரன் அன்றிரவே ஒரு கடிதம் எழுதினான். அந்தக் கடிதம் காலைத் தபாலில் அவனுடைய வீட்டுக்கு வந்தது.

ஆசா அப்போது படுத்திருந்தாள். வேலைக்காரன் கடிதத்தைக் கொணர்ந்தான். ''அம்மா, கடிதம்!''

ஆசாவின் இதயம் திக்கென்று அடித்துக்கொண்டது. இமைப்பொழுதில் பலவிதச் சந்தேகங்களும், ஆறுதல்களும் அவளுடைய மனத்துள் எழுந்தன. பரபரப்புடன் தலை நிமிர்ந்து கடிதத்தை நோக்கினாள். மகேந்திரனுடைய கையெழுத்தில்

விநோதினியின் பெயர் எழுதியிருந்தது. மறு கணமே அவளுடைய தலை தலையணையில் சாய்ந்தது. வாய் திறவாமல் அவள் கடிதத்தை வேலைக்காரனிடமே கொடுத்தாள். ''எவரிடம் கொடுக்க வேண்டும், அம்மா?'' என்றான் வேலைக்காரன்.

''தெரியாது.''

இரவு அப்போது மணி எட்டு இருக்கும். மகேந்திரன் புயல் வேகத்தில் விநோதினியின் அறை யெதிரே வந்தான். உள்ளே விளக்கில்லை. எங்கும் இருள் கவிந்திருந்தது. சட்டைப் பையிலிருந்து தீப் பெட்டியை எடுத்து ஒரு வர்த்தியைக் கொளுத்திப் பார்த்தான். அறை காலியாகக் கிடந்தது. விநோதினியையோ அவளுடைய பெட்டி படுக்கைகளையோ காணவில்லை. தென்னண்டைப் பக்கம் வராந்தாவிலும் எவரும் இல்லை. 'விநோத்' என்று அவன் அழைத்த குரலுக்குப் பதில் ஏதும் வரவில்லை.

'நான் முட்டாள்! முழு முட்டாள்! அப்போதே அவளை என்னுடன் அழைத்துச் சென்றிருக்க வேண்டும். நிச்சயமாக அவ்ள் வீட்டில் தங்க முடியாதபடி அம்மா ஏதாவது கஷ்டப் படுத்தியிருப்பாள்.' - இவ்வாறு அவனுக்குத் தோன்றவும், அப்படித்தான் இருக்கும் என்று உறுதியும் கொண்டான். மகேந்திரன் பொறுமையை இழந்தவனாய்த் தாயின் அறையினுள் சென்றான். அந்த அறையிலும் விளக்கில்லை. ஆனால் படுக்கையில் ராஜலட்சுமி படுத்திருப்பது இருளிலும் புலனாகியது. அவன் கடுமையான குரலில், ''அம்மா! விநோதினியை நீ ஏதாவது சொன்னாயா?'' என்று கேட்டான்.

''ஒன்றும் சொல்லவில்லையே!''

''பின் அவள் எங்கே சென்றாள்?''

''எனக்கென்ன தெரியும்!''

மகேந்திரன் அவநம்பிக்கையுடன், ''உனக்கா தெரியாது? நல்லது, அவளைத் தேடி நான் போகிறேன். அவள் எங்கிருந்தாலும், நான் கண்டு பிடிக்கத்தான் போகிறேன்'' என்று கிளம்பினான். ராஜலட்சுமி எழுந்து பரபரப்புடன் அவன் பின்னால் ஓடினாள். ''மகேன்! போகாதே. திரும்பி வா. நான் சொல்வதைக் கேட்டுக்கொண்டு போ'' என்றாள்.

மகேந்திரன் ஒரே மூச்சில் விரைந்து வீட்டுக்கு வெளியே வந்தான். கண நேரத்துக்கெல்லாம் திரும்பி வந்து காவல்காரனைக் கேட்டான்: ''விநோத் யஜமானியம்மா எங்கே போனாள்?''

''எங்களிடம் சொல்லவில்லையே! எங்களுக்குத் தெரியாதே.''

மகேந்திரன் மிரட்டும் குரலில், ''தெரியாதா?'' என்று உறுமினான்.

காவலாள் கை குவித்துக் கூறினன்: ''தெரியாதுங்களே!'

'ஓ! அம்மாவின் பாடந்தான் இது' என்று தன்க்குள் தீர்மானித்து மகேன், "நல்லது" என்ருன்.

மாநகரின் ராஜ வீதியில் கியாஸ் விளக்குகள் ஒளிரும் இருளிடையே 'ஐஸ் கிரீம்', 'தப்ஸி மீன்' என்று விற்பவர் கூவித் திரிந்தனர். முழக்கமிடும் ஜனத் திரளினிடையே மகேந் திரன் நுழைந்து மறைந்தான்.

36

தனிமையில் இருளிடையே உட்கார்ந்திருப்பது விஹாரிக்குப் பிடிக்காது. தனக்குத் தானே மதிப்பிட்டுக்கொள் வதை ஒரு வழக்கமாக அவன் என்றுமே எண்ணியதில்லை. படிப்பு, ஏதாவது அலுவல், நண்பர்கள், உற்ருர் இவர்களுட னேயே மூழ்கியிருப்பான். சுற்றியுள்ள உலகைத் தன்னிலும் மதிப்புடையதாகவே பாவித்தான் அவன். ஆனல் திடீ ரென்று ஒரு நாள் பலத்த தாக்குதலினல் எல்லாம் சிதறிப் போயின. ஊழிக் காலத்தின் காரிருளில், வானைத் தொடு மளவு உயர்ந்த வேதனையின் உச்சியில், தன்னந் தனியே நிற்க வேண்டி வந்தது. அதுமுதலாக அவனுக்குத் தன்னிடமே அச்சம் தோன்றியது. தானே வலிய வந்து காரியங்களைத் தலையில் போட்டுக்கொண்டு, இந்தத் தோழனுக்கு ஓய்வளிக்க அவன் விரும்பவில்லை.

ஆனல் அன்று தன் உள்ளத்தினுள் உறைபவரை விஹாரியால் ஒதுக்கி வைக்க இயலவில்லை. முதல் நாளே விஹாரி விநோதினியை ஊரில் கொண்டு விட்டிருந்தான். அதுமுதல் எவருடன் எந்த வேலையில் ஈடுபட்டாலும், மார்புக் குகையினுள் வேதனையில் மட்கும் இதயம், ஆழ்ந்த தனிமையை நோக்கி அவனை ஓயாமல் இழுத்தது. சோர்வும் களைப்பும் அவனைத் தோல்வியுறச் செய்தன. இரவு அப்போது மணி ஒன்பது இருக்கும். அவனுடைய வீட்டின் எதிரே இருந்த தென்னண்டை வராந்தாவில் கோடைக் கால அந்திவேளையின் இனிய காற்று அலையாடியது. நிலவு இராத மாடியின் இருளில் ஒரு கம்பளத்தின்மேல் உட்கார்ந்திருந்தான் விஹாரி.

அன்று சாயங்காலம் வசந்தனுக்கு அவன் பாடம் சொல்லித் தரவில்லை. சீக்கிரமாகவே அவனை வீட்டுக்கு அனுப்பிவிட்டான். ஆறுதலுக்காக, தோழமைக்காக, பல கால

மாகப் பழகிய அன்பு மண்டிய இன்பம் பயக்கும் முன்போன்ற வாழ்க்கைக்காக, அவனுடைய மனம் தாயைக் காணாத குழந்தை போல் உலகின் இருளில் இரு கைகளையும் தூக்கி எவரையோ அணைத்துக்கொள்ளத் துழாவியது. அவனுடைய உறுதி, கடுமையான தன்னடக்கம் இவை எல்லாம் சிதைந்துபோயின. எவரைப்பற்றி எண்ணக்கூடாது என்றிருந்தானோ, அவர்களைக் குறித்தே அவனுடைய இதயம் தாவியது. அதைத் தடுக்க அவனிடம் ஒரு சிறிதளவும் வலிமை இல்லை.

மகேந்திரனுடன் இளமையில் நட்புத் தொடங்கியது முதல் அதன் இறுதி வரையில் - பலவித நிறங்கள் கொண்ட, நீர் நிலம் மேடு பள்ளங்கள் என்ற பிரிவுடன் மனத்தில் இதுவரையில்- சுருட்டி வைத்திருந்த நட்புச் சித்திரத்தை விஹாரி தன் மனக் கண்முன் விரித்தான். தன் வாழ்க்கையை எந்த உலகை நம்பி நிலைக்க வைத்திருந்தானோ, அது எங்கு, எந்தக் கெட்டக் கிரகத்துடன் மோதியதோ என்று அவன் ஆராய்ந்தான். முதலில் வெளியேயிருந்து வந்தது யார்? மாலையில் பகலவன் மங்கும் வேளையில் செந்நிற ஒளிபட்ட நாணிச் சிவந்த ஆசாவின் முகம் இருளில் எழுந்தது. அத்துடன் மங்கள விழாவின் சங்கொலியும் அவன் காதில் ஒலித்தது. இந்த மங்களமான கிரகம் எங்கிருந்தோ வந்து அவர்களுடைய நட்பின் குறுக்கே நின்றது. சிறிய பிளவு ஏற்பட்டது. அத்துடன் ஓரளவு வேதனையும் உள்ளூறத் தோன்றியது. அதை வெளியிலும் சொல்ல முடியாது; மனத்தில் நினைப்பதுகூடத் தவறு. ஆனால் அந்தப் பிரிவு - அந்த வேதனை - அபூர்வமான அன்பு கலந்து இனிய ஒளிசூழப் பெற்றிருந்தது. ஒரு நிறைவையும் அது பெற்றிருந்தது.

அதன் பின் தோன்றிய சனியின் வருகையால் நட்பு, கணவன் மனைவியின் பாசம், இல்லத்தின் அமைதி, தூய்மை யாவும் துகளாயின. விஹாரி வெறுப்புடன் விநோதினியைத் தன் முழு உள்ளத்துடன் தொலைவில் தள்ளிவிட முயன்றான். ஆனால், இதென்ன வியப்பாக இருக்கிறது! அவனுடைய தாக்குதலில் வலிமையே இல்லை! அது அவளைத் தொடக்கூட இல்லையே! அந்த வனப்பார்ந்த புதிர், ஊடுருவக் காண முடியாத ரகசியம் பொதிந்த "தன் கருவிழிகளுடன் தேய்பிறையின் இருளில் அவன் எதிரே நின்றது. கோடை இரவில் தென்றல் அவனுடைய பெருமூச்சைப் போலவே வீசியது. இமையாது நின்ற அந்தக் கண்களின் தீச்சுடர் மெல்ல மங்கியது. வறண்ட பார்வையில் குளிர்ந்த உணர்ச்சிப் பெருக்கு ஊற்றெடுத்துக் கண்ணீராக வடிந்தது. கண நேரத்துக்குள் அந்த உருவம் விஹாரியின் காலடியில் விழுந்து அவனுடைய முழங் கால்களைக் கட்டிக்கொண்டது.

பின்னர் அது அபூர்வமான மாயக் கொடிபோல் கணநேரத்துக் குள்ளாகவே விஹாரியைத் தழுவி வளர்ந்தது. பின்னர் அப்போதுதான் மலர்ந்து இன்மணம் கமழும் பூப் போன்ற முகம் விஹாரியின் முகத்தினருகே தன் இதழ்களைக் கொணர்ந்தது. விஹாரி கண்களை மூடிக்கொண்டு அந்தக் கற்பனை உருவைத் தன் நினைவுலகிலிருந்து அகற்ற முயன்றான். ஆனால் அவளை ஒதுக்கித் தள்ள அவனுக்குக் கையெழவில்லை. நிறைவு பெறாத உள்ளத் துடிப்பை வெளிக்காட்டும் முத்தம் அவன் முகத்தின் எதிரேயே நின்று அவனை மெய்சிலிர்க்க வைத்தது.

மாடியில், ஒலி இராத இருளில் இருக்க அவனால் முடிய வில்லை. வேறு எதிலாவது மனத்தைச் செலுத்தும் நோக்கத் துடன் அவன் பரபரவென்று விளக்கொளி பரவியிருந்த அறையினுள் வந்தான்.

ஒரு மூலையில் சிறிய மேஜையின்மேல் பட்டுத்துணி போர்த்த படம் ஒன்று வைத்திருந்தது. விஹாரி துணியைத் தள்ளி அந்தச் சித்திரத்தை அறையின் நடுவே விளக்கின் கீழே வைத்துக்கொண்டு உட்கார்ந்து பார்க்கத் தொடங்கினான்.

அந்தச் சித்திரம், மகேந்திரன் - ஆசா இருவருக்கும் மணமான சில நாட்களுக்குப் பின்னர் எடுத்த அவர்களுடைய படமாகும். அதன் பின்புறம் மகேந்திரன் தன் கையால் 'மகேன் அண்ணு' என்றும் ஆசா, 'ஆசா' என்றும் பெயரை எழுதி அளித் திருந்தனர். சித்திரத்தினுள் அந்தப் புது மணத்தின் இனிய நாள் அப்போதும் மறையவில்லை. மகேந்திரன் நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறான். அவனுடைய முகத்தில் புதிதாக மண மானதன் விளைவான ஒரு புது மலர்ச்சி. பக்கத்தில், ஆசா நிற்கிறாள்; சித்திரம் எடுத்தவன் ஆசாவை முசுக்கிட்டுக் கொள்ள விடவில்லை. ஆனால் முகத்தில் படர்ந்த அந்த நாணத்தை மட்டும் அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அந்த மகேந்திரன் தன் பக்கத்தில் நிற்கும் ஆசாவை அழவைத்து விட்டு இதோ தொலை தேசம் போகிறான்! ஆனால் அசையாத அந்தச் சித்திரத்திலோ அவனுடைய முகத்தின் இளங்காதலிலே ஒரு துளிகூட மாறுதல் இல்லை. ஒன்றும் புரியாமல் மூடத் தனமாக விதியின் விளையாட்டை நிலைநிறுத்திக் காட்டியது அந்தச் சித்திரம்!

அந்தச் சித்திரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு விஹாரி விநோதினியைத் தன் மனத்திலிருந்து வெறுத்து விரட்ட எண்ணினான். ஆனால் விநோதினியின் பரிதாபமான பார்வை யும் இளமை நிறைந்த மெல்லிய தோள்களும் அவனுடைய கால்களை விடாது பிடித்துக்கொண்டன. 'இத்தகைய வனப்பா காதல் ததும்பிய அந்தக் குடும்பத்தைப் பாழடித்

தது?' என்று விஹாரி தனக்குள் சொல்லிக்கொண்டான். ஆனால் நிமிர்ந்த தலையுடன் முத்தமிட நெருங்கிய விநோதினி யின் அந்த முகமோ, ''நான் உங்களை நேசிக்கிறேன். உலகத்தில் நான் உங்களைத்தான் தேர்ந்தெடுத்தேன்'' என்றது. ஆனால், இதுவா பதில்! இந்தச் சொற்கள் சிதைந்த குடும்பத்தின் பரிதாபமான ஓலத்தை மறைக்குமா! - பேய்ப் பிறவி!

'பேய்ப் பிறவி!'—இதைச் சொல்லும்போது அவன் குரலில் கடுமைமட்டும் தொனித்ததா? அல்ல; ஓரளவு பரிவு மல்லவா அதில் கலந்திருந்தது! விஹாரி தன் வாழ்வில் காதலின் உரிமையை இழந்தவனைப் பிச்சைக்காரன்போல் வீதியில் வந்து நின்றபோது, இப்படி வேண்டாமலேயே தன்னை நாடி வரும் காதற்சுவையை முழு மனத்துடன் அலட்சியம் செய்ய முடியுமா? இதற்கு ஈடாக அவனுக்கு என்ன கிடைத்தது? இத்தனை நாட்களாகத் தன் வாழ்வை அர்ப்பணம் செய்துவிட்டுப் பாசத்துக்காக ஏங்கிக் கை நீட்டி அலைந்தான் விஹாரி. காதல் தெய்வம் பொன் தட்டில் அவனுக்கென்றே அவளை அனுப்பியபோது, அந்தத் துரதிருஷ்டசாலி எவ்வாறு அதை இழக்க முற்படுவான்!

சித்திரத்தை மடியில் வைத்தவாறு அவன் பலவிதமான யோசனைகளில் ஆழ்ந்திருந்தபோது பக்கத்தில் ஓசை கேட்டுத் திடுக்கிட்டு நிமிர்ந்தான். மகேந்திரனைக் கண்டதும் விஹாரி சட்டென்று எழுந்திருந்தபோது சித்திரம், கீழே கம்பளத்தின் மேல் விழுந்தது. விஹாரி அதைக் கவனிக்கவில்லை.

மகேந்திரன் முதலெடுத்ததுமே, ''விநோதினி எங்கே?'' என்று கேட்டான்.

விஹாரி முன்னால் வந்து மகேந்திரனுடைய கையைப் பிடித்தான். ''மகேன் அண்ணா! கொஞ்சம் உட்கார். உன்னுடன் எல்லாவற்றையும் பேசுகிறேன்'' என்றான்.

''உட்காரவோ, பேசவோ எனக்கு நேரம் இல்லை! சொல், விநோதினி எங்கே?''

''நீ கேட்கும் கேள்விக்கு ஒரு வார்த்தையில் பதில் சொல்வது முடியாது. நீ கொஞ்சம் பொறுமையுடன் இருக்க வேண்டும்.''

''ஏன், புத்தி சொல்லப் போகிறாயா? அந்தப் புத்திமதிகளை எல்லாம் சின்ன வயதிலேயே படித்தாயிற்று.''

''இல்லை. புத்தி சொல்ல எனக்கு உரிமையும் இல்லை; திறமையும் கிடையாது.''

''திட்டப் போகிறாயா? நான் வஞ்சகன் என்று எனக்குத் தெரியும். நான் மனிதகுலத்திலேயே இழிந்தவன். நீ என்ன

சொன்னாலும் அது எனக்குப் பொருந்தும். ஆனால் எனக்கு இப்போது வேண்டியது இதுதான். விநோதினி இருக்கும் இடம் உனக்குத் தெரியுமா; தெரியாதா?''

''தெரியும்.''

''எனக்குச் சொல்லுவாயா, முடியாதா?''

''மாட்டேன்.''

''சொல்லத்தான் வேண்டும். நீ அவளைத் திருடிக் கொணர்ந்து ஒளித்து வைத்திருக்கிறாய். அவள் எனக்கு உரியவள். அவளைத் திருப்பிக் கொடு.''

விஹாரி கண நேரம் கம்மென்றிருந்தான். பின்னர் அழுத்தமான குரலில், ''அவள் உன்னுடையவளல்ல. நான் அவளைத் திருடிக்கொண்டு வரவில்லை. அவளாகவே என்னிடம் வந்து அடைக்கலம் கேட்டாள்'' என்றான்.

மகேந்திரன், ''பொய் பேசுகிறாய்'' என்று உறுமியவாறு பக்கத்து அறையின் கதவைத் தட்டி உரக்கக் கத்தினான்: ''விநோத், விநோத்!''

அறையினுள்ளிருந்து அழுகுரல் கேட்கவும் அவன், ''அஞ்சாதே, விநோத்! நான் மகேந்திரன். உன்னை விடுவித்து அழைத்துச் செல்கிறேன். உன்னை எவராலும் சிறைப் பிடித்து வைக்க முடியாது'' என்று முழுப் பலத்துடன் கதவைத் தள்ளவே கதவு திறந்துகொண்டது. உள்ளே அவன் ஓடினான். அறையில் இருள் கப்பிக்கொண்டிருந்தது. தெளிவற்ற நிழல்போல் படுக்கையில் யாரோ பயத்துடன் அசைவற்றுத் தலையணையை மார்பில் அணைத்துப் படுத்திருப்பது தெரிந்தது. விஹாரி பரபரவென்று உள்ளே நுழைந்து வசந்தனைப் படுக்கையிலிருந்து தோளில் தூக்கிக்கொண்டு, ''பயப்படாதே, வசந்தா! பயப்படாதே!'' என்றான் அவனுக்கு ஆறுதலாக.

மகேந்திரன் விடுவிடென்று வெளியேறி வீடெங்கும் ஒவ்வோர் அறையிலும் தேடிவிட்டு வந்தான். அப்போதும் வசந்தன் பயத்தால் நடுநடுங்க விம்மிக்கொண்டிருந்தான். விஹாரி அறையினுள் விளக்கைக் கொளுத்தி அவனைப் படுக்கையில் படுக்கவைத்து மெல்லத் தடவித் தூங்கப் பண்ணுவதில் முனைந்திருந்தான்.

மகேந்திரன் மறுபடியும், ''விநோதினியை எங்கே ஒளித்திருக்கிறாய்?'' என்று கேட்டான்.

''மகேன் அண்ணா! வீண் குழப்பம் செய்யாதே, அநாவசியமாக இந்தப் பையனைப் பயமுறுத்திவிட்டாய்! இவனுக்கு அதனால் ஏதாவது உடல் அசௌகரியம் ஏற்படக்கூடும். நான் சொல்வதைக் கேள். விநோதினியின் இருப்பிடம்பற்றி உனக்குத் தெரியவேண்டிய அவசியமே இல்லை.''

''சாது!..பெரிய மகான்! எனக்கு நீ நியாயம் சொல்ல வேண்டாம்! என் மனைவியின் படத்தை மடியில் வைத்துக் கொண்டு இராவேளையில் எந்தத் தெய்வத்தின் தூய நாமத்தை ஜபம் செய்துகொண்டிருந்தாய்? வேஷக்காரா!'' என்று மகேந்திரன் படத்தைக் கீழே போட்டுச் செருப்பணிந்த காலி னால் அதை மிதித்து நசுக்கினான். சித்திரத்தைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்து விஹாரியின்மேல் எறிந்தான்.

அவனுடைய வெறியைக் கண்டு அஞ்சி வசந்தன் மீண்டும் அழத் தொடங்கினான். விஹாரியின் தொண்டையும் அடைத் தது. மகேனை நோக்கியபடி கதவை விரலால் சுட்டி, ''போ!'' என்று மட்டுமே அவன் சொன்னான்,

மகேந்திரன் புயல் போல் வேகமாக வெளியேறினான்.

37

சூட்டம் இராத பெண்கள் வண்டியில் சாளரத்தின் மூலம் வயல்கள், மரநிழல்கள் சூழ்ந்த ஒரு கிராமம் தென் பட்டபோது, விநோதினியின் உள்ளத்தில் குளுமையும், தனி மையும் கலந்த நாட்டுப்புறத்து வாழ்க்கையின் நினைவு எழுந் தது. அந்த மரநிழல் கவிந்த சூழ்நிலையில், தானே அமைத்த கற்பனைக் கூட்டினுள் தனக்குப் பிடித்தமான புத்தகங்களைக் கொண்டு சில காலம் பட்டண வாழ்க்கையில் அநுபவித்த தாகம், ஏக்கம், மனப்புண் இவற்றை மறந்து அமைதி பெற முடியும் என்று அவளுக்குத் தோன்றியது. கோடை யில் வயல்வெளிகளில் பயிர் இல்லை. எல்லையற்ற அந்த வெளியின் நடுவே சூரியன் உதயமாகும் காட்சியைக் கண்டு அவளுக்குப் பல கற்பனைகள் எழுந்தன. இனி அவளுக்கு என்ன வேண்டும்! பொன்னிறம் படைத்துப் பரந்து விளங்கும் அந்த மோனத்தில் யாரையும் மறந்து இரு கண்களையும் மூடிக் கொள்ள விரும்பியது அவள் மனம். 'சுகதுக்கத்துக்கிடையே அலையாடும் கடலிலிருந்து வாழ்க்கைப்படகைக் கரையொதுக்கி நிச்சப்தமான அந்திப்பொழுதில் அசைவற்ற ஆலமரத்தில் கட்டி வைக்கலாம்! இனி என்ன தேவை இருக்கிறது? வண்டி ஓடும் போது ஓரோரிடத்தில் மாந்தோப்பிலிருந்து பூந்துணரின் மணம் வரும். நாட்டுப்புறத்தின் தண்ணிய அமைதி அவளை முற்றும் தன் வசமாக்கிக்கொண்டது. 'நல்லதாயிற்று: இனிமேல் எதற் காக வீணே இழுத்துக்கொண்டு திரியவேண்டும்! இனி எல்லா

வற்றையும் மறந்து தூங்கப் போகிறேன். நாட்டுப்புறத்துப் பெண்ணுகி வீட்டின் உள்ளேயும் ஊருக்கும் உழைத்துத் திருப்தி யுடன் சுகமாகக் காலங் கழித்துவிடவேண்டும்' என்று அவள் தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

குமையும் உள்ளத்தில் இந்த அமைதியின் நம்பிக்கையை ஏந்தி விநோதினி தன் குடிலினுள் நுழைந்தாள். ஆனுல் அமைதி எங்கே? வெறிச்சிடும் அங்கே-வறுமையே தென்பட்ட அங்கே-இருந்தவை அசுத்தமாகவும் கிழிந்தும், அழுக்கடைந் தும் கேட்பாரற்றுக் கிடந்தன. பல நாட்களாக அடைத்துக் கிடந்த வீட்டினுள் புழுக்கம் அவளை மூச்சு விட முடியாமல் திணற அடித்தது. இருந்த சில பொருள்களையும் கறையான் கள் அரித்திருந்தன. எலிகள் கடித்தும், தூசியால் பாழாகி யும் கிடந்தன. அந்திப்பொழுது வீட்டிற்குச் சென்ருள் அவள். வீட்டிலோ களிப்புமில்லை; ஒளியுமில்லை. இருண்டிருந் தது அந்த இல்லம். ஒருவாருக அவள் எண்ணெய் விளக்கை ஏற்றவும், அதன் புகையிலும், மங்கிய ஒளியிலும் வீட்டின் வறுமை பின்னும் தெளிவாகியது.* முன்னெல்லாம் எதைக் கண்டு அவள் அஞ்சவில்லையோ அது இப்போது அவ ளுக்கு அருவருப்பையே தந்தது. அவள் உள்ளம் உறுதியாக எதிர்க்குரல் எழுப்பியது: ''இங்கே ஒரு நிமிஷங்கூட இருக்க முடியாது.'' அலமாரியில் பழைய புத்தகங்கள் இரண்டொன் றும் சில மாதப் பத்திரிகைகளும் கிடந்தன. ஆனுல் அவற் றைத் தொட அவளுக்கு விருப்பமில்லை. எதிரே காற்றின் மூச்சே இராத மாந்தோப்பினுள் சிள்வண்டுகளின் அரவமும், கொசுக்களின் இசையுமே அவ்விருளில் ஒலித்தன.

விநோதினியின் உறவினளான கிழவி வீட்டைப் பூட்டிக் கொண்டு பெண்ணைப் பார்க்கத் தொலைவிலிருந்த மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்றிருந்தாள். விநோதினி பக்கத்து வீட்டுக்குச் சென்ருள். அவளைக் கண்டதும் அங்கிருந்தவர் திடுக்கிட்டனர். ''அடியம்மா! விநோதினியின் நிறமே நன்ருகச் செவேலென்று மாறிவிட்டதே! உடையும் பகட்டாகத் துரைசானியினது போல் இருக்கிறது'' என்று குறிப்பாகத் தங்களுக்குள் ஏதோ பேசிக்கொண்டு அவர்கள் விநோதினியை நோக்குவதும் ஒரு வரையொருவர் பார்த்துக்கொள்வதுமாக இருந்தனர். ஊர் வாய் மூலம் அவர்கள் ஏதோ வதந்தி கேட்டதுபோன்ற அறிகுறி தென்பட்டது, அவர்கள் பேச்சிலும் செய்கை யிலும்.

நாட்டுப்புறத்தின் தொடர்பிலிருந்து தான் பலவிதத்தி லும் விலகிச் சென்றுவிட்டதை விநோதினி 'துளித்துளியாக உணர்ந்துகொண்டாள். சொந்த வீட்டிலேயே அவள் ஒதுங்கி

வாழ வேண்டி வந்தது. ஒரு நிமிஷங்கூட அமைதி பெற இட மின்றித் தவித்தாள் அவள்.

தபால் ஆபீசில் கிழத் தபால்காரன் விநோதினிக்கு இள வயது முதல் அறிமுகமானவன். மறு நாள் அவள் குளத்தில் குளிக்க இறங்க இருந்தபோது கடிதப் பையுடன் தபால்காரன் வழியோடு போய்க்கொண்டிருப்பதைப் பார்த்தாள். அவளால் தன்னை அடக்கிக்கொள்ள முடியவில்லை. குடத்தைக் கீழே வைத்துவிட்டுப் பரபரப்புடன் அவனை அழைத்தாள் விநோதினி :

''பாஞ்சு தாத்தா, எனககுக் கடிதம் இருக்கிறதா?''

''இல்லையம்மா'' என்றான் கிழவன்.

அவள் ஆவலுடன், ''இருக்கும் பார்'' என்று ஊருக்கு வந்த ஐந்தாறு கடிதங்களைத் திருப்பித் திருப்பிப் பார்த்தாள். அவற்றில் எதுவும் அவளுடையதல்ல; வாடிய முகத்துடன் அவள் துறையில் இறங்கியபோது, அவளுடைய தோழி ஒருத்தி குறும்பாக, ''ஏனடி பிந்தி (விநோதினி), கடிதாசுக்காக ஏன் இப்படிப் பறக்கிறாய்?'' என்று கேட்டாள்.

வாயாடி இன்னொருத்தி, ''ரொம்ப நல்லதடீ. தபாலில் கடிதம் வரும் அதிர்ஷ்டம் எத்தனை பேருக்கு இருக்கிறது! நம் புருஷனோ மைத்துனனோ, தம்பியோ வெளியூரில் வேலை பார்த்தாலுங்கூடத் தபால்காரனுக்கு நம்மேல் தயை இல்லையே!'' என்றாள்.

இப்படிப் பேச்சோடு பேச்சாகக் கேலியும் வலுத்தது; அவர்கள் பார்வையும் கூர்மையாக உறுத்தலாயிற்று. அன்றாடம் முடியாவிட்டாலும் குறைந்தது வாரத்துக்கு இரண்டு முறை யாவது இரண்டு வரி கடிதம் எழுத விநோதினி விஹாரியை வெகுவாய்க் கேட்டுக்கொண்டாள். அன்றைய தினமே விஹாரி யின் கடிதத்தை எதிர்பார்ப்பது சரியல்ல; ஆனால் அவளுக்கு இருந்த ஆத்திரத்தில் அச்சிறிதளவு நம்பிக்கையை விநோதினி விடவில்லை. கல்கத்தாவை விட்டு வந்து வெகு காலமாகி விட்டது போலவே அவளுக்குத் தோன்றியது.

ஊரில் வீடுதோறும், மகேந்திரனுடன் அவளுடைய பெயர் கலந்து எவ்வளவு தூரம் பரவிவிட்டது என்று விநோதினி கண்டாள். இனி அமைதிக்கு இடம் எங்கே?

ஊராரிடமிருந்து ஒதுங்கி ஒட்டுதலின்றி வாழ முயன்றாள் விநோதினி. அது ஊராருக்குப் பின்னும் ஆத்திரத்தை மூட்டி யது. இந்தப் பாவியை அருகில் வைத்துக்கொண்டே வெறுக் கவும், அவளை வதைக்கவும் செய்து மகிழும் சுகத்தை விட்டு விட அவர்கள் விரும்பவில்லை.

அந்தக் குக்கிராமத்தில் பிறரிடமிருந்து ஒளிந்து வாழ

முயலுவது வீண். புண்பட்ட நெஞ்சை இருண்ட மூலையில் தனியே ஆற்றிக்கொள்ள ஓய்வு கிடையாது. நாலு பக்கங்களி லிருந்தும் பலருடைய கூரிய பார்வை புண்ணின்மேல் படாமல் இராது. கூடைக்குள் அகப்பட்ட மீன் போல், விநோதினியின் உள்ளம் துள்ளும்போதெல்லாம் குறுகிய சூழ்நிலையில் அடி யுண்டு விழுந்தது. இங்கு வேதனையைக்கூடச் சுயேச்சையாக முற்றும் அநுபவிக்க வழியில்லை.

இரண்டாம் நாள் கடிதம் வரும் வேளை கடந்த பின்னர், விநோதினி அறையின் கதவைத் தாழிட்டுக்கொண்டு எழுதலானாள்:

விஹாரி பாபு! அஞ்சாதீர்கள். உங்களுக்கு நான் காதல் கடிதம் எழுதவில்லை. நீங்கள் என்னைப்பற்றி அக்கறை கொண்டவராதலால் உங்களை வணங்குகிறேன். நான் செய்த குற்றத்திற்குக் கடுமையான தண்டனை அளித்தீர்கள். நீங்கள் கட்டளையிட்டதுமே உங்கள் தண்டனையை நான் தலையால் ஏற்றுக்கொண்டேன். ஆனால் என் வருத்தம் இதுதான்: நீங்கள் கொடுத்த தண்டனையின் கொடுமை எவ்வளவு கொடியது என்பதை நீங்கள் பார்க்கவில்லையே! பார்த்தாலோ அல்லது தெரிந்தாலோ உங்கள் உள்ளத்தினுள் சற்றுவது தயை பிறக்குமே! அதுகூட எனக்குக் கிட்டாமல் போய்விட்டது; உங்களை நினைத்தும், உள்ளத்தினுள் உங்கள் பாதங்களை வைத்துத் தலைவணங்கியும் அதை நான் பொறுத்துக்கொண்டு விடுவேன். ஆனால், ஸ்வாமி, சிறைச்சாலைக் கைதிக்குக்கூட ஆகாரம் கிடைக்கிறது அல்லவா! நல்ல உணவு இராவிடினும் உயிரைக் காத்துக்கொள்ள வேண்டிய அளவேனும் கிடைக்கத் தான் செய்கிறது. உங்களிடமிருந்து இரண்டு வரி அடங்கிய கடிதமே இந்தத் தனிமையில் எனக்கு உணவாகும். அதுவும் கிடைக்காவிட்டால் இது நாடு கடத்தல் அல்ல; மரண தண் டனையேதான். எனக்கு இவ்வளவு கொடிய தண்டனை அளிக்க வேண்டாம், நீதிபதியே! இந்தப் பாவியின் உள்ளத்தில் அகந் தைக்கு ஓர் அளவில்லை. எவரிடமேனும் இவ்வாறு தலைகுனிய வேண்டிவரும் என்று, நான் கனவிலும் எண்ணியவளல்ல. நீங்கள் வென்றீர்கள்; நான் அதற்கு எதிராகப் புரட்சி செய்ய மாட்டேன். ஆனால் என்னிடம் கருணை காட்டுங்கள். என்னை வாழவிடுங்கள். இந்தக் காட்டில் வாழும் எனக்குச் சிறிதேனும் உணவு அளியுங்கள். அப்படிச் செய்தால் உங்கள் தண்டனை யினின்று என்னை வழுவச் செய்ய எவராலும் முடியாது. இந்த வருத்தத்தையே நான் தெரிவிக்கிறேன். இன்னும் எவ்வளவோ விஷயங்கள் மனத்தில் இருக்கின்றன. சொல்லிவிட வேண்டும் என்று உள்ளம் வெடித்துப் போகிறது. அவைகளை உங்களுக்குத்

தெரிவிக்கக்கூடாது என்று சபதம் செய்துகொண்டிருக்கிறேன். அந்தச் சபதத்தை நிறைவேற்றிவிட்டேன்.

உங்கள்,
விநோத் மன்னி.

விநோதினி கடிதத்தைத் தபாலில் சேர்த்தாள். ஊரெல்லாம் சீச்சீ என்று அவளைத் தூற்றினார்கள். வீட்டினுள் கதவைப் போட்டுக்கொள்வது, கடிதம் எழுதுவது, பதிலுக்காகத் தபால்காரனைப் பின் தொடருவது; கல்கத்தாவில் இருந்த பொழுது இப்படியெல்லாமா அலைந்தாள் அவள்!

மறு நாளும் அவளுக்குக் கடிதம் ஏதும் வரவில்லை. அன்றைக்கெல்லாம் விநோதினி கம்மென்று உட்கார்ந்திருந்தாள். முகத்தில் கடுமை பரவியது. அவமானம், தாக்குதல்களினால் கடையப்பட்டு, அவளுடைய உள்ளத்தின் உட்புரையிலிருந்து கொடிய நாசசக்தி உருவெடுத்து வெளிவரத் தொடங்கியது. அஞ்சத்தக்க அந்தக் கொடிய உருவம் வெளிப்படுவது கண்டு விநோதினி அச்சத்துடன் வீட்டுக் கதவைத் தாழிட்டுக்கொண்டாள்.

விஹாரிக்குச் சொந்தமான அடையாளம் ஏதும் அவளிடம் இல்லை; படமோ, ஒரு சின்னக் கடிதமோ எதுவும் இல்லை. அவள் தன்னுள் எதையோ தேடினாள். விஹாரியின் அடையாளம் எதையேனும் மார்புறத் தழுவி வறண்ட விழிகளைத் தடாகமாக்க விரும்பினாள், விநோதினி. கண்ணீர்ப் பெருக்கு உள்ளத்தில் கடுமையை இளக்கிப் புரட்சிக் கனலை அழிக்கும். பின்னர் விஹாரியின் கொடிய கட்டளையை இதயத்தின் மென்மையான அன்புப் பீடத்தில் இருத்த வேண்டும். ஆனால் மழை இராத பிற்பகல் வானைப்போல் அவள் உள்ளம் கொளுத்திக்கொண்டே இருந்தது. நாலு பக்கங்களிலும் எங்கும் ஒரு சொட்டுத் தண்ணீர்கூடக் காணவில்லை!

ஒரே நினைவாக எவரை மனத்தில் அழைக்கிறோமோ, கட்டாயம் அவர் வந்தே தீருவார் என்று விநோதினி கேள்வியுற்றிருந்தாள். அவள் கைகளைக் குவித்துக்கொண்டு விஹாரியை அழைத்தாள்: ''என் வாழ்க்கை வறண்டது; என் உள்ளம் வெறிச்சோடிவிட்டது. நாற்புறமும் என்னைச் சுற்றி எங்குமே எதுவும் இல்லை. இந்தத் தனிமையில் ஒரு முறையேனும் நீங்கள் வரவேண்டும். ஒரு கணம் இருந்தாலும் போதும். நீங்கள் வரத்தான் வேண்டும். உங்களை ஒருகாலும் விடமாட்டேன்.''

இதை உள்ளூற அவள் சொல்லும்போது உண்மையாகவே பலம் உண்டாகியது. இந்த அன்பின் வலிமை, வேண்டுதலின்

சக்தி வீணுகாது என்றும் அவளுக்குத் தோன்றியது. நடக்க முடியாத ஒரு நம்பிக்கைக்கு இடம் தருவதால், இதயந்தான் சோர்வடைகிறது. ஆனல் இவ்வாறு ஒரே மனமாக உயிரை மறந்து வேண்டினுல், ஓரளவு சக்தி உண்டாவதுபோல் தோன்றுகிறது. உலகில் மற்றவற்றைத் துறந்து, வேண்டியது ஒன்றையே ஆசை இழுப்பதால், ஒவ்வொரு கணமும் அது நெருங்குவது போல் மனத்தினுள் ஓர் எண்ணம் தோன்றுகிறது.

இவள் விஹாரியின் நினைவில் மூழ்கியிருக்கையில், அந்திப் பொழுது விளக்கில்லாத வீட்டினுள் இருள் முற்றும் கப்பிக் கொண்டது. சமூகம், ஊர், நாட்டுப்புறம் எதுவும் அவளுக்கு மறைந்துவிட்டது. அந்தச் சமயம் திடீரென்று கதவு தட்டும் ஓசை கேட்கவும், விநோதினி தரையிலிருந்து விரைவாக எழுந்து அசையாத நம்பிக்கையுடன் கதவைத் திறந்தாள். ''ஸ்வாமி! வந்துவிட்டீர்களா?'' என்றாள். இந்தக் கணத்தில் இந்த உலகில் அவளுடைய வாயிலருகில் வேறு எவரும் வர முடியாதென்று அவள் உறுதியாக நம்பினுள்.

''வந்துவிட்டேன், விநோத்'' என்றான் மகேந்திரன்.

அளவற்ற வெறுப்பும் கசப்பும் கலந்த குரலில் விநோதினி, ''போ; போய்விடு! இங்கிருந்து போய்விடு! இப்போதே போ'' என்று கூவினுள்.

மகேந்திரன் இதை எதிர்பார்க்கவில்லை; திகைத்து நின்றான்.

''ஏனடி பிந்தி! உன் மாமியார்க் கிழவி நாளைக்கு..'' என்றவாறு வந்த வயதான பக்கத்து வீட்டுக்காரி, விநோதினியின் வீட்டுக் கதவருகே வந்ததும், ''அடியம்மா!'' என்று முசுக்கை இழுத்துக்கொண்டு விரைந்தோடினுள்.

38

ஊரில் பெருங் குழப்பம் மூண்டது. கிழவர்கள் சண்டி மண்டபத்தில் கூழுமிப் பேசினர்: ''இதை ஒருகாலும் பொறுத்துக்கொள்ள முடியாது. கல்கத்தாவில் என்ன நடந்ததோ, காதில் போட்டுக்கொள்ளாமல் இருந்துவிடலாம். ஆனல் மகேந்திரனுக்குக் கடிதத்திற்கு மேல் கடிதம் போட்டு ஊருக்கு வரவழைத்து வெளிப்படையாக இப்படி வெட்கம் கெட்டு அலைய இத்தனை துணிச்சலா? இப்பேர்ப்பட்ட விபசாரியை ஊரில் வைத்துக்கொள்வதும் தவறு.''

அன்று விஹாரியின் பதில் நிச்சயம் வரும் என்று விநோ

தினி நம்பியிருந்தாள். ஆனால் பதில் வரவில்லை. விநோதினி தனக்குள் சொல்லிக்கொண்டாள்: 'என்மேல் விஹாரிக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? அவருடைய கட்டளையை நான் ஏன் கேட்கச் சென்றேன்? எப்படிக் கட்டளையிடுகிறாரோ, அதைத் தலை வணங்கி ஏற்றுக்கொள்கிறேன் என்று ஏன் அவருக்கு விளங்கச் செய்தேனோ? அவருடைய அன்புக்குரிய ஆசாவுக்கு வாழ்வளிக்க எது தேவையோ அது மட்டுந்தானா என்னுடன் அவருடைய உறவு! எனக்குமட்டும் உரிமை கொண்டாட எதுவுமே கிடையாதா? இரண்டு வரிக் கடிதங்கூட எனக்கு எழுதக் கூடாதா அவர்? அவ்வளவு கேடு கெட்டவளா நான்? அவ்வளவு வெறுக்கத்தக்கவளா?' - இவ்வாறு எண்ணும் போது பொறாமை விஷம்போல் அவளுடைய உள்ளத்தில் நிறைந்தது. 'வேறு எவருக்காகவேனும் இத்தனை வேதனைகளையும் பொறுத்துக்கொள்ளலாம். ஆனால் ஆசாவுக்காக வேண்டி, இப்படிச் செய்ய நான் தயாராக இல்லை. இந்த வறுமை, இந்தக் காட்டு வாழ்க்கை, ஊரார் அவதூறு, அவமதிப்பு, வாழ்வில் எவ்விதத்திலும் நிறைவு பெறாததால் இந்த அதிருப்தி இவை அனைத்தையும் ஆசாவின் பொருட்டு நான் சுமக்க வேண்டுமா? இத்தனை பெரிய ஏமாற்றத்துக்கு நான் ஏன் தலை குனிந்து ஆளானேன்? எதையும் பாழாக்கும் இந்த நோன்பை முற்றும் நான் நிறைவேற்றி யிருக்கலாமே! நான் முட்டாள்; புத்தியில்லாதவள். விஹாரியை ஏனோ நான் காதலித்தேன்?'

விநோதினி மரப்பதுமைபோல் அறையினுள்ளேயே உட்கார்ந்திருந்தாள். அதே சமயம் அவளுடைய மாமியார்க் கிழவி மாப்பிள்ளை வீட்டிலிருந்து திரும்பியதுமே, "ஏனடி எரிமூஞ்சி! இதென்ன பழியடி? ஊரெல்லாம் பேசுகிறதே!" என்றாள்.

"நீங்கள் கேட்பது எல்லாம் உண்மைதான்."

"பின் இந்தப் பழியைச் சுமந்துகொண்டு ஊருக்கு வருவானேன்? இங்கே எதற்காக வந்தாய்?"

எழும் கோபத்தை அடக்கிக்கொண்டு விநோதினி கம்மென்று உட்கார்ந்திருந்தாள். "அடியம்மா! நீ இங்கே இருப்பது முடியாது. அதைத்தான் சொல்ல வந்தேன். என் தலையெழுத்து; எல்லாரும் செத்து மடிந்துவிட்டார்கள். இதைக் கூடப் பொறுத்துக்கொண்டு உயிருடன் இருக்கிறேன். ஆனால் இந்தப் பழிச் சொல்லை என்னால் பொறுக்க முடியாது. சீச்சீ! இப்படியும் என்னைத் தலை குனிய வைத்துவிட்டாயே! இப்போதே இங்கிருந்து போய்விடு" என்றாள் கிழவி.

"இப்போதே போய்விடுகிறேன்" என்றாள் விநோதினி.

இந்தச் சமயம் மகேந்திரன், குளிக்காமல், உணவு கொள்ளாமல், தலை பரட்டையாக அங்கே திடீரென்று வந்து நின்

றான். இரவு முழுவதும உறககம இராததால் கண்கள் சிவந்து முகம் வாடிக் கிடந்தது. விடியலில் இருள் பிரிவதற்கு முன் பாகவே வந்து இரண்டாவது தடவையாக விநோதினியை அழைத்துச் செல்ல முயற்சி செய்வது என்று அவன் உறுதி கொண்டிருந்தான். ஆனால் முதல் நாள் இரவு எதிர்பாராத விதமாக அவள் வெறுத்து உதறவே, அவனுடைய உள்ளத்தில் தயக்கம் உண்டாகத் தொடங்கியது. பொழுது ஏறியது; வண் டிக்கும் நேரம் குறுகிக்கொண்டே வந்தது. அவன் தன் மனத்தி லிருந்து எல்லா விதமான சந்தேகங்களையும் தயக்கத்தையும் அகற்றிவிட்டு ஸ்டேஷனில் பிரயாணிகள் தங்குமிடத்திலிருந்து வண்டியில் ஏறி விநோதினியின் வீட்டு வாயிலுக்கே வந்து சேர்ந்தான். வெட்கத்தை விட்டு வெளிப்படையாகத் துணிச்ச லான ஒரு காரியத்தைச் செய்ய முற்பட்டால் பௌருஷம் மிகுந்த ஒரு சக்தி பிறக்கும். அந்தச் சக்தியின் பெருக்கு மகேந் திரனுக்குக் களிப்பின் வெறியை மூட்டியது. சோர்வு, 'தயக் கம் எல்லாம் சுக்குநூறாகிப் போயின. அவனுடைய வெறித்த நோக்கில் ஊர் மக்கள் உயிரற்ற புழுதிப் பதுமைகள்போலத் தோன்றினர். எந்தப் பக்கமும் நோக்காமல் மகேந்திரன் நேராக விநோதினியின் அருகே சென்றான். "விநோத்! ஊரார் பழிச் சொற்களுக்கு எதிரே உன்னைத் தனியே விட்டுச் செல்ல நான் கோழையல்ல. உன்னை எவ்வாறாவது இங்கிருந்து அழைத் துச் செல்லத்தான் போகிறேன். பின்னர் வேண்டுமானால் என்னைத் தள்ளிவிடு; நான் உன்னைத் தடுக்கமாட்டேன். இன்று உன்னைத் தொட்டு நான் சபதம் செய்கிறேன். உனக்கு எப்படி இஷ்டமோ, அதன்படியே நடக்கலாம். என்மீது கருணை பிறந்தால் பிழைத்துப் போகிறேன். இல்லையானால், உன் வழியை விட்டுத் தொலைவில் போய்விடுகிறேன். நான் உலகில் அவநம்பிக்கைக்குக் காரணமாகப் பல காரியங்கள் செய்து விட்டேன். ஆனால், இன்று என்மேல் அவநம்பிக்கை கொள்ளாதே! நாம் புரட்சிப் பெருக்கின் எதிரே நிற்கிறோம். இது ஒளிந்து விளையாடும் வேளையல்ல" என்றான் மகேந்திரன்.

விநோதினி முகமாற்றமின்றிச் சகஜமாகவே, "என்னை உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள். வண்டி இருக்கிறதா?" என்றாள்.

"இருக்கிறது!"

விநோதினியின் மாமியார்க் கிழவி உள்ளிருந்து வெளியே வந்தாள். "மகேன்! உனக்கு என்னைத் தெரியாது. ஆனால் நீ எனக்கு வேற்று மனிதனல்ல. உன் தாய் ராஜலட்சுமி எங்கள் ஊர்ப் பெண்தான். ஊர் உறவில் நான் அவளுக்கு மாமி முறை யாக வேண்டும். இதென்ன நடத்தையப்பா? உனக்கு வீட்டில்

ஒரு பெண்டாட்டி இருக்கிருள்; தாயார் இருக்கிருள். இருந்தும், நீ இப்படிப் பெண் பித்துப் பிடித்து அலேகிருய்! நாலு பேர் எதிரே ஊரில் எப்படித் தலே காட்டுவாய்?'' என்ருள் அவள்.

உணர்ச்சி வெள்ளத்தில் திளேக்கும் மகேந்திரனுக்கு இது ஒரு தடையாக வந்தது. அவனுக்குத் தாயும், மனேவியும் இருக்கிருர்கள், வெளியே சமூகம் என்றும் ஒன்று இருக்கிறது என்பது அவனுக்குப் புதிதாகத் தோன்றியது. முன்பின் அறியாத இந்தத் தொலேதூரக் கிராமத்தில் அறிமுகமிராத வீட்டின் வாயிலில் இப்படியும் ஒரு பேச்சுக் கேட்க வேண்டி வரும் என்று அவன் கனவிலும் நினேத்தவனல்ல. பட்டப் பகலில் ஊரின் நடுவே ஒரு குடும்பத்தின் விதவைப் பெண்ணே வீட்டிலிருந்து வெளியே அழைத்துச் செல்லும்படி அவன் வாழ்க்கையில் ஓர் அபூர்வமான அத்தியாயம் வரைந்திருந்தது; இருந்தும், அவனுக்கு மனேவி, தாய் இருக்கிருர்கள்; ஊரிலும் சமூகம் என்று ஒன்று இருக்கத்தான் செய்தது!

மகேந்திரன் பதில் பேசாமல் நிற்பது கண்டு, கிழவி மீண்டும் சொன்னுள்: "போவதானுல் இப்போதே போய் விடு! போ! என் வீட்டு முற்றத்தில் நிற்க வேண்டாம். ஒரு நிமிஷங்கூட நிற்க வேண்டியதில்லே'' என்று அவள் உள்ளே போய்க் கதவை உட்புறம் அடைத்துக்கொண்டாள். குளிக்கவோ, உணவு கொள்ளவோ இராமல், அழுக்கு உடையுடன் விநோதினி வெற்றுக் கையுடன் வண்டியில் ஏறினுள். மகேந்திரனும் உடன் ஏற வந்தபோது விநோதினி, ''வேண்டாம். ஸ்டேஷன் தொலேவல்ல. நடந்தே வாருங்கள்'' என்ருள்.

''அப்படியானுல், ஊரில் எல்லாரும் என்னேப் பார்த்து விடுவார்களே!'' என்ருன் மகேந்திரன்.

''இன்னுங்கூட உங்களுக்குக் கூச்சம் இருக்கிறதா?'' என்று கேட்ட விநோதினி வண்டிக் கதவை மூடிக்கொண்டாள். ''நீ ஸ்டேஷனுக்கு வண்டியை ஓட்டு'' என்ருள் விநோதினி வண்டிக் காரனிடம்.

''பாபு வரவில்லேயா?'' என்ருன் வண்டிக்காரன்.

மகேந்திரன் முதலில் சற்றுத் தயங்கியவன் அதற்குமேல் செல்லத் துணியவில்லே. வண்டி சென்றது. மகேந்திரன் ஊர் வழியே செல்லாமல், வயலில் இறங்கிச் சுற்றிக்கொண்டு தலே குனிந்தவாறு ஸ்டேஷனே நோக்கி நடந்தான்.

அப்போது ஊர்ப் பெண்கள் குளித்துச் சாப்பிட்டாயிற்று. வேலேகளிலிருந்து அப்போதுதான் ஓய்வு பெற்ற வயதான சில பெண்கள்மட்டும் குடம், எண்ணெய்க் கிண்ணம் இவற்றுடன் மாந்தோப்பினிடையே நிழல் கவிந்து குளிர்ச்சி தரும் குளத்தின் படித்துறையை நோக்கிச் சென்றுகொண் டிருந்தனர்

39

மகேந்திரன் எங்கோ சென்றுவிட்டான் என்ற கவலையில் ராஜலட்சுமி ஊண் உறக்கத்தைத் துறந்தாள். போகக் கூடிய இடம், போகக் கூடாத இடம் எங்கெல்லாமோ அவனைத் தேடி ஸாதுசரணர் அலைந்தார். இந்தச் சமயம் மகேந்திரன் விநோதினியுடன் கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்தான். படல்டாங்கா வீட்டில் அவளை இறக்கிவிட்டு, இரவு அவன் தன் வீட்டுக்கு வந்தான்.

தாயின் அறையினுள் அவன் நுழைந்தபோது அங்கு இருள் கவிந்திருந்தது. மண்ணெண்ணெய் விளக்கை மறைவாக வைத்திருந்தது. நோயாளிபோல் ராஜலட்சுமி படுத்திருந்தாள். ஆசா, காலருகில் உட்கார்ந்து மெல்ல அவளுடைய கால்களைப் பிடித்தாள். மருமகள் மாமியின் காலருகில் இடம் பெற இவ்வளவு காலமாகியது.

மகேந்திரன் வந்ததுமே ஆசா சட்டென்று எழுந்து அறையை விட்டு வெளியே சென்றாள். மகேந்திரன் ஒருவித உறுதியுடன் தயக்கத்தை விட்டு, ''அம்மா! இங்கே எனக்குப் படிக்கச் சௌகரியம் இல்லை. காலேஜுக்கு அருகில் வீடு பார்த்திருக்கிறேன். அங்கேதான் இருக்கப் போகிறேன்'' என்றான்.

ராஜலட்சுமி விரலினால் படுக்கையின் ஓரத்தைச் சுட்டி, ''மகேன்! கொஞ்சம் உட்கார்'' என்றாள்.

மகேந்திரன் கூச்சத்துடனேயே படுக்கையின் ஓரமாக உட்கார்ந்தான். ''மகேன்! நீ உனக்கு இஷ்டமான இடத்தில் இருந்துகொள். ஆனால் என் மருமகளைமட்டும் கஷ்டப்படுத்தாதே!'' என்றாள் ராஜலட்சுமி.

''நான் துரதிருஷ்டம் பிடித்தவள். அதனால்தான் இத்தகைய லட்சுமியைப் புரிந்துகொள்ளவில்லை'' என்று சொல்லும்போது ராஜலட்சுமியின் தொண்டை அடைத்துக் கொண்டு வந்தது. ''ஆனால், இத்தனை நாட்களாக இவளை அறிந்தும், காதலித்தும் வந்த நீ கடைசியில் இப்படி வேதனைக்கு இவளை ஆளாக்கியது எப்படி?'' - இதற்குமேல் அவளால் சொல்ல முடியவில்லை; அழத் தொடங்கினாள்.

அங்கிருந்து எழுந்து ஓடிவிடலாம் என்றிருந்தது மகேந்திரனுக்கு. ஆனால் சட்டென்று எழுந்திருக்க அவனால் முடியவில்லை. இருளில் படுக்கையின் ஓரமாகவே வாய் திறவாமல் உட்கார்ந்திருந்தான்.

வெகு நேரம் பொறுத்த ராஜலட்சுமி, ''இன்று ராத்திரி இங்கேதானே இருப்பாய்?'' என்றாள்.

"இல்லை."

"எப்போது போகிறாய்?"

"இப்போதே."

ராஜலட்சுமி மிகவும் கஷ்டத்துடன் எழுந்து உட்கார்ந்தாள். "இப்போதேயா? உன் பெண்டாட்டியைப் பார்த்துப் பேசக்கூடாதா?" என்றாள்.

மகேந்திரன் யாதொரு பதிலும் சொல்லவில்லை,

"இந்தச் சில நாட்கள் அவளுக்கு எவ்வாறு கழிந்தன என்பதைச் சிறிதும் உணரவில்லையா? அட வெட்கங் கெட்டவனே! உன் அழுத்தத்தைக் கண்டு என் மார்பு விண்டு போகிறதடா!" என்றதும் வெட்டுண்ட மரம்போல் அவள் படுக்கையில் சாய்ந்தாள்.

மகேந்திரன் தாயின் படுக்கையிலிருந்து எழுந்து வெளியே வந்தான். மெல்ல ஓசை செய்யாமல் மாடிப்படிகளில் ஏறித் தன் படுக்கை அறைக்குச் சென்றான். ஆசாவைச் சந்திக்க அவனுக்கு விருப்பம் இல்லை.

மகேந்திரன் மேலே சென்றதும், படுக்கை அறைக்கு எதிரே கூரையிட்ட வராந்தாவில் ஆசா தரையில் கிடப்பதைக் கண்ணுற்றான். மகேந்திரன் வரும் ஓசை அவளுக்குக் கேட்கவில்லை. திடீரென்று அவன் எதிரே வரவும், ஆசா பரபரப்புடன் உடைகளைச் சரிப்படுத்திக்கொண்டு எழுந்தாள். அப்போது மகேந்திரன் ஒரு முறை 'சுனி' என்று அழைத்திருந்தாலும் போதும். அவள் உடனே அவனுடைய தவறுகளை எல்லாம் தன்னுடையவை என்று தலைமேல் ஏற்று மன்னிப்புப் பெற்ற குற்றவாளிபோல் அவனுடைய கால்களில் விழுந்து வாழ்வின் வேதனைகளை எல்லாம் அழுது தீர்த்திருப்பாள். ஆனால் அவனால் அவ்வாறு செல்லப் பெயரிட்டு அழைக்க முடியவில்லை. அவன் எவ்வளவோ முயன்றான்; இஷ்டமும் இருந்தது. ஆனால் அதனால் வேதனைமட்டுமே மிஞ்சியது. ஆசாவைக் கொஞ்சுவது எல்லாம் கேலிக் கூத்தாகவே ஆகும் என்பதை அவனால் மறக்க முடியவில்லை. வீண் வார்த்தைகளால் ஆறுதல் கூறுவதில் என்ன பலன்? விநோதினியைத் துறக்கும் வழியை அவன் தானாகவே தன் கைகளால் தடுத்துவிட்டானே!

ஆசா கூச்சத்தில் புழுங்கிப் போய் உட்கார்ந்திருந்தாள். எழுந்து நிற்கவோ, போகவோ, வேறு ஏதாவது செய்யவோ அவளுக்கு வெட்கமாகவும் இருந்தது. மகேந்திரன் ஒன்றும் பேசாமல் மாடியில் உலாவத் தொடங்கினான். தேய்பிறை நாள்; வானத்தில் சந்திரன் இன்னும் தோன்றவில்லை. மாடியின் மூலையில் ஒரு சிறு தொட்டியில் இருவாட்சிச் செடியின் இரண்டு கிளைகளில் மலர்கள் பூத்திருந்தன. மேலே இருண்ட

வானில் தாரகைகள், ஏழு முனிவர்கள், கால புருஷன்; இவர்கள் பல நாட்கள் அந்திப் பொழுதில் எத்தனையோ ரகசிய மான காதல் விளையாட்டுகளுக்கு மௌன சாட்சிகளாக இருந்த வர்கள். அன்றும் இவர்கள் வாய் திறவாமல் கவனித்தனர்.

நடுவே கழிந்த சில நாட்களின் புரட்சிக் கதையை இந்த வானின் இருளில் ஆழ்த்திவிட்டு முன்போல் இந்த மாடியின் திறந்த வெளியில் கம்பளத்தை விரித்து, ஆசாவின் பக்கத்தில் பழக்கமான இடத்தில் சகஜமாகச் சென்று உட்கார முடிந் தால் நன்ருக இருக்குமே என்று எண்ணமிடலானுன் மகேந் திரன். கேள்வியோ, பதிலோ கூடாது. அதே அன்பும், நம் பிக்கையும், சகஜமான களிப்பும் நிலவவேண்டும். ஆனல், உல கத்தில் அந்தச் சிறு இடத்துக்குத் திரும்ப வழி இல்லையே! ஆசாவின் பக்கத்தில் இருந்த இடத்தை அவன் போக் கடித்துக் கொண்டுவிட்டான். இதுவரை விநோதினிக்கும் அவனுக்கும் இடையே உறவு சுயேச்சையாக இருந்தது; காத லிப்பதில் ஒரு வெறி இருந்தது. ஆனல் தளராத பிணைப்பு இல்லை. இப்போதோ அவன் அவளைச் சமூகத்திலிருந்து தன் கையால் பிரித்து இழுத்து வந்தான். இனி அவளைக் கொண்டு விடவோ திரும்ப அனுப்பவோ இடம் இல்லை. மகேந்திரன் தான் அவளது ஒரே நம்பிக்கை இனி; விரும்பினுலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி. அவளுடைய பொறுப்பு முழுவதை யும் அவன் ஏற்றுத்தான் ஆகவேண்டும். இதை எண்ணும் போது அவனுக்கு உள்ளூறக் கஷ்டமாக இருந்தது. மாடியில் இருந்த வாழ்க்கை, அமைதி, தடையற்ற தம்பதிகளின் கூடுதல், இரவின் தனிமை இவை யாவும் அவனுக்கு மிகவும் இன்பம் தருவனவாகத் தோன்றின. ஆனல் எளிதில் கிடைக்கக் கூடிய அந்தச் சுகம் - அவனுக்கு மட்டுமே உரிய அந்த இன்பம் - இன்று அவனுக்கு எட்டாத கனியாகவே இருந்தது. தலைமேல் ஏற்றுக்கொண்ட சுமையை இறக்கி வாழ்நாளில் ஒரு கணங் கூட நிம்மதியாக இருக்க முடியாது என்றே அவனுக்குத் தோன்றியது.

நீண்ட பெருமூச்சுடன் அவன் ஒரு முறை ஆசாவின் பக்கம் பார்த்தான். பொங்கியெழும் அழுகையை மார்பினுள் நிரப்பிக் கொண்டு ஆசா அசைவற்று உட்கார்ந்திருந்தாள். இரவின் இருள் தாயின் தலைப்பைப் போல் அவளுடைய கூச்சம், வேதனை இவற்றை மூடி மறைத்தது.

மகேந்திரன் உலாவுவதை நிறுத்திவிட்டு ஏதோ கூறு வதற்காக ஆசாவை நெருங்கினுன். உடலின் இரத்தம் மொத்த மும் ஆசாவின் காதினுள் சென்று ஒலித்தது. அவள் தன் கண்களை மூடிக்கொண்டாள். அவளிடம் அவன் என்ன சொல்ல

வந்தான்? என்ன இருக்கிறது சொல்லத்தான்! மகேந்திரனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. ஆனால் ஒன்றும் சொல்லாமல் திரும்பவும் முடியவில்லை. ''சாவிக் கொத்து எங்கே?'' என்றான் அவன்.

கொத்துச் சாவி படுக்கையின்கீழ் இருந்தது. ஆசா எழுந்து உள்ளே சென்றாள். மகேந்திரனும் அவளைப் பின் தொடர்ந்தான். ஆசா படுக்கையின் அடியிலிருந்து சாவியை எடுத்துப் படுக்கையின்மேல் வைத்தாள். மகேந்திரன் அதைக் கையில் எடுத்துக்கொண்டு தன் உடுப்புக்கள் இருந்த அலமாரியில் ஒவ்வொன்றாகப் பொருத்திப் பார்க்கத் தொடங்கினான். ஆசாவினால் அதற்குமேல் கம்மென்றிருக்க முடியவில்லை. ''அந்த அலமாரியின் சாவி என்னிடம் இல்லை'' என்றாள் அவள்.

சாவி எவரிடம் இருந்தது என்று பெயரிட்டுச் சொல்ல ஆசாவுக்கு நா எழவில்லை. ஆனால் மகேந்திரன் அதைப் புரிந்துகொண்டான். ஆசா விடுவிடென்று வெளியே சென்றாள். தன் அழுகை எங்கு அவன் எதிரே வெளிப்பட்டுவிடுமோ என்று அவள் அஞ்சினாள். இருண்ட மாடிச் சுவரின் ஒரு மூலையாக முகம் திரும்பி நின்று பொங்கி எழுந்த அழுகையைப் பாடுபட்டு அடக்கிக்கொண்டு விம்மினாள் ஆசா.

ஆனால் அதிக நேரம் அழக்கூட அவளுக்குப் பொழுதில்லை. மகேந்திரன் சாப்பிடும் நேரமாகிவிட்டதல்லவா! ஆசா பரபரவென்று கீழே சென்றாள்.

''மகேன் எங்கே, அம்மா?'' என்றாள் ராஜலட்சுமி.

''மேலே இருக்கிறார்.''

''நீ ஏன் இறங்கி வந்தாய்?''

''அவருக்குச் சாப்பாடு..'' என்று குனிந்த தலையுடன் ஆசா ஆரம்பித்தாள்.

''நான் அதைக் கவனிக்கிறேன். நீ கொஞ்சம் ஒழுங்கு படுத்திக்கொள், அம்மா. சீக்கிரம் அந்தப் புது டாக்கா சேலையை உடுத்துக்கொண்டு என்னிடம் வா. நான் தலையைப் பின்னிவிடுகிறேன்.''

மாமியின் கொஞ்சு மொழிகளை உதறித் தள்ள அவளால் முடியவில்லை. ஆனால் புத்தாடை அணிகளை புனைந்துகொள்ளும் எண்ணம் அவளை உள்ளூறக் குன்றச் செய்தது. சாவைக் கோரிய பீஷ்மர் அம்புப் படுக்கையை எவ்வாறு பொறுத்தாரோ, அவ்வாறே ராஜலட்சுமி செய்த அலங்காரங்களைப் பொறுமையுடன் ஆசா ஏற்றுக்கொண்டாள்.

அலங்காரம் முடிந்ததும், ஆசா மெதுவாக மாடிப்படிகளில் ஏறி மேலே சென்றாள். எட்டிப் பார்த்தபோது, மாடியில் மகேந்திரன் இல்லை. மெல்லக் கதவருகில் சென்றாள்.

அறையின் உள்ளேயும் அவனைக் காணவில்லை. சாப்பாடு அப்படியே கிடந்தது.

சாவி இராததால், தனது சக்தியை உபயோகித்து அலமாரியைத் திறந்து மகேந்திரன் சில உடைகளையும், புத்தகங்களையும் எடுத்துச் சென்றிருந்தான்.

மறு நாள் ஏகாதசி. நோய்வாய்ப்பட்ட ராஜலட்சுமி சோர்வுடன் படுத்திருந்தாள். வெளியே வானம் இருண்டு புயல் வீசும் போலத் தோன்றியது. ஆசா மெல்ல அறையினுள் நுழைந்து ராஜலட்சுமியின் காலருகே சென்று அவளுடைய காலைத் தொட்டாள். ''அம்மா, உங்களுக்குப் பாலும் பழமும் கொண்டு வந்திருக்கிறேன், சாப்பிடுங்கள்'' என்றாள்.

பரிதாபமாக வந்து நின்ற மருமகள் - முன்பின் செய்தறியாதவள் - இப்படிப் பணி புரிய முன்வந்து நிற்பது கண்டு ராஜலட்சுமியின் கண்களில் நீர் பெருக்கெடுத்தது. அவள் எழுந்து உட்கார்ந்து ஆசாவை அணைத்துக் கண்ணீரால் நனைந்த அவளுடைய கன்னத்தை முத்தமிட்டாள்; ''மகேன் என்ன செய்கிறான், அம்மா?'' என்றாள்.

ஆசா கூச்சம் அடைந்தாள். ''அவர் போய்விட்டார், அம்மா'' என்று மெல்லப் பதில் அளித்தாள்.

''எப்போது போனான்? எனக்குத் தெரியாதே!''

ஆசா தலை குனிந்தாள். ''நேற்று இரவே அவர் போய் விட்டார்'' என்றாள்.

இதைக் கேட்டதும் ராஜலட்சுமியின் அன்பு எங்கோ போய்விட்டது. மருமகளிடம் அவள் காட்டிய ஆதரவு சட்டென்று மறைந்தது. ஆசா இந்தக் கஷ்டத்தையும் வாய் திறவாமல் உணர்ந்து மெல்லத் தலை குனிந்தவாறு எழுந்து சென்றாள்.

40

முதல் இரவு படல்டாங்கா வீட்டில் தன்னை விட்டு மகேந்திரன் துணிகளையும் புத்தகங்களையும் எடுத்து வரச் சென்றபோது விநோதினி கல்கத்தாவின் ஓயாத ஜனத்திரளின் ஓசை நடுவே தன்னுடைய வாழ்க்கையைப்பற்றியே யோசித்துக்கொண் டிருந்தாள். உலகில் அவளுக்குக் கிடைத்த இடம் எதுவும் விசாலமாக இல்லை. இருந்தாலும், ஒரு புறம் மரத்துப் போனால் திரும்பிப் படுக்க இடம் இருக்கத்தான் இருந்தது. இப்போது அவள் நம்பிவந்த இடம் மிகவும் குறுகியது. வெள்ளத்தில் அவள் ஏறி மிதந்துவரும் படகு இடது புறமோ வலது புறமோ சற்றுச் சாய்ந்தாலும் போதும்; ஒரேடியாக நீரில்தான் விழவேண்டும். ஆகவே, மிகவும் கவன மாகச் சுக்கானைப் பிடித்துக்கொள்ள வேண்டும். சிறிதளவு தவறு, அசைவுகூடத் தாங்காது. இந்த நிலையில் கலங்காத பெண் உள்ளமும் உண்டா? பிறருடைய மனத்தை முற்றும் வசப்படுத்தத் தேவையான வசிய விளையாட்டுக்களுக்கு இடை வெளி இந்தக் குறுகிய இடத்தில் ஏது? மகேந்திரன்முன் வாழ் நாளையெல்லாம் கழிக்கத் தயாராக இருக்கவேண்டும். இருவ ரிடையே உள்ள வேறுபாடு இதுதான்: மகேந்திரன் கரை யேற வழி இருந்தது. ஆனால் விநோதினிக்கோ அது இல்லை.

தன்னுடைய பலவீனமான நிலை விநோதினிக்குத் தெளி வாகத் தெரியவே, அவள் மனத்தை உறுதிப்படுத்திக்கொண் டாள் - ஏதாவது, ஒரு வழியை ஏற்படுத்திக்கொள்ளாமல் இருப்பது கூடாது என்று முடிவு செய்தாள்.

விஹாரியிடம் தன் காதலை வெளியிட்டது முதல் அவளுக்கு இருந்த பொறுமையின் அணை சிதைந்துவிட்டது. விஹாரியின் முகத்துக்கு எதிரே எடுத்துச் சென்ற முத்தத்தை வேறு எங்கேயும் அளிக்க முடியவில்லை. பூஜைக்குரிய நைவேத்தியம்போல் தெய்வத்துக்கென்று இராப்பகலாக அதை எடுத்துத் திரிந்தாள் விநோதினி. எந்த நிலையிலும் விநோதினியின் உள்ளம் முற்றும் தளர்ந்து விடுவதில்லை. ஏமாற்றத்தை எளிதில் அவள் ஒப்புக்கொள்ள மாட்டாள். ஓயாமல் அவள் மனம் உயிர்விட்டுக் கத்தியது: 'இந்தப் பூஜையை விஹாரி ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும்.

அடங்காத இந்தக் காதலுக்கு மேலாகத் தன்னைக் காத்துக் கொள்ளும் தீவிர ஆவலும் சேர்ந்துகொண்டது. விஹாரியை விட்டால் அவளுக்கு யார் உதவி செய்வார்கள்? மகேந்திரனை அவள் நன்றாகத் தெரிந்துகொண் டிருந்தாள். அவன் மேல்

பொறுப்பைச் சுமத்தினுல் அவனுல் தாங்க முடியாது. அவனை உதறித் தள்ளினுல்தான் அவனைப் பெறமுடியும். பிடித்துக் கொண்டாலோ ஓடிவிடவே அவன் நினைப்பான். ஆனுல், பெண்களுக்கு இன்றியமையாத, நம்பிக்கையான - கவலையோ, அச்சமோ, ஆபத்தோ இராத-ஓர் ஆதரவான இடத்தை அளிக்க விஹாரியால்தான் முடியும். விஹாரியை விட்டால் வேறு கதியில்லை என்று விநோதினிக்கு தோன்றியது.

ஊரை விட்டு வரும்போது அவள் தன் பெயருக்கு வரும் கடிதங்களைப் புது விலாசத்துக்கு அனுப்பும்படி மகேந்திரன் மூலம் ஸ்டேஷனை ஒட்டியிருந்த தபாலாபீசில் சொல்லியிருந்தாள். தன் கடிதத்துக்குப் பதிலே போடாது விஹாரி இருப்பான் என்று அவளால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. 'ஏழு நாட்கள் பொறுமையுடன் பதிலுக்காகக் காத்திருப்பேன். அதற்குப் பிறகு பார்த்துக்கொள்ளலாம்' என்று எண்ணினுள்.

விநோதினி இருளில் சாளரக் கதவைத் திறந்து 'கியாஸ்' விளக்குகள் ஒளிரும் கல்கத்தா நகரை ஏதோ நினைவுடன் பார்த்துக்கொண்டிருந்தாள். 'இந்த அந்திப் பொழுதில் விஹாரியும் இதே ஊரில்'தான் இருக்கிருர். ஒரு சில தெருக்களையும், சந்துகளையும் தாண்டிச் சென்றுல் அவர் வீட்டு வாயிலை அடைந்துவிடலாம். பின்னர்த் தண்ணீர்க் குழாய் இருக்கும் முற்றம், படிக்கட்டு, ஒழுங்காக விளக்குகளுடன் இருக்கும் சுத்தமான அறை; அங்கு அமைதியும் மோனமும் நிலவ விஹாரி தனிமையில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருப்பான். அருகில் அந்தப் பிராம்மணச் சிறுவனும் இருப்பான். உருண்டு திரண்ட அங்கங்களும், செக்கச் சிவந்த உடலும், அகன்ற கண்களுமாக அந்தச் சிறுவன் பொம்மைப் புத்தகம் ஒன்றைப் புரட்டிக்கொண்டிருப்பான். - ஒவ்வொன்ருக இந்த நினைவுகள் வரும்போது அவை அவள் மனத்திரையில் சித்திரமெனப் பதிந்தன. விநோதினியின் உள்ளம் அன்பும் காதலும் நிறைந்து சிலிர்த்தது. விரும்பினுல் இப்போது அங்கே சென்றுவிடலாம் என்று அவள் கற்பனையில் மூழ்கினுள். சில நாட்களுக்கு முன்பாக இருந்தால் அதை நிறைவேற்ற அவள் முன்னேகியும் இருப்பாள். ஆனுல் இப்போதோ யோசனை செய்யப் பல விஷயங்கள் இருந்தன. ஆசையை நிறைவேற்றிக்கொண்டால்மட்டும் போதாது. இலட்சியமும் கைகூட வேண்டுமல்லவா! 'முதலில் விஹாரி என்ன பதில் எழுதுகிருர் என்று பார்க்கலாம். அதன் பின்னர் எந்த வழியில் போகலாம் என்று திடப்படுத்திக்கொள்வோம்' என்று எண்ணினுள் அவள். ஒன்றும் புரியாமல் விஹாரிக்குக் கசப்பை உண்டாக்க அவளுக்குத் துணிவில்லை.

இவ்வாறு யோசனையிலேயே இரவு மணி பத்தாகி விட்டது. மகேந்திரனும் மெல்ல உள்ளே வந்தான். சில நாட்களாகவே உறக்கமோ, குறிப்பிட்ட நேரத்தில் உணவோ இன்றி அவன் மிகவும் அலேச்சலில் உழன்ருன். காரியம் கைகூடி விநோதினியை அழைத்து வந்ததும் சோர்வும் களைப்பும் அவனை ஆட்கொண்டன. உலகத்துடனும், தன் நிலையுடனும் எதிர்த்து நிற்க அவனுக்கு வலிமை இல்லை. எதிர்காலத்தின் கவலை மிகுந்த வாழ்க்கையின் கஷ்டங்களுங் கூட இப்போதே அவனை வாட்டின போலும்!

மூடியிருந்த கதவின் முன்னர் நின்று தட்ட அவனுக்குக் கூச்சமாக இருந்தது. எந்த வெறியின் மிகுதியில் உலகைச் சற்றும் மதிக்காமல் இருந்தானே, அந்த வெறி இப்போது எங்கே? தெருவோடு செல்லும் அயல் மனிதர்கள் முன்னல் கூட அவன் உடல் குன்றிப் போவானேன்!

உள்ளே புதிய வேலையாள் தூங்கிவிட்டான். கதவைத் திறக்கவைக்கப் பாடுபட வேண்டியதாயிற்று. பழக்கம் இராத புது வீடு இருட்டில் உள்ளே நுழைந்ததும் அவனுடைய மனம் கம்மென்று அடங்கியது. தாய்க்குச் செல்லமான பிள்ளை; பலவித ஆடம்பரங்களில் ஊறியவன்; இழுக்கும் பங்கா (விசிறி), விலையுயர்ந்த சோபா, நாற்காலிகள் இவற்றுடன் பழக்கப்பட்டவன்; புது வீட்டில் அவை இராத குறை, அன்று சாயங்காலம் தெளிவாகத் தெரிந்தது. இந்த ஏற்பாடுகளை யெல்லாம் அவன் செய்துகொள்ள வேண்டும். வீட்டுக்குத் தேவையானவற்றை அவன்தானே கவனித்தாக வேண்டும்? இதுவரையில் மகேந்திரன் தனக்காகவோ, பிறருடைய சுகத்துக்காகவோ கவலைப்பட்டவனல்ல. இனிப் புதிதாக அமைத்த இந்த நிறைவு பெருத குடும்பத்திற்கு வேண்டியதை அவன்தான் பொறுப்புடன் கவனிக்க வேண்டியவன். மாடிப் படியில் மண்ணெண்ணெய்க் கைவிளக்கு, புகையைக் கக்கி மங்கலாக எரிந்தது. அதற்குப் பதிலாக நல்ல விளக்கு ஒன்று வாங்க வேண்டும். வராந்தாவிலிருந்து மாடிக்குச் செல்லும் வழி குழாய் நீர் வழிவதால் பாசிபிடித்து வழுக்கலாக இருந்தது. மேஸ்திரியை அழைத்துச் சிமெண்ட் பூசி மராமத்துச் செய்தாக வேண்டும். வாசல் பக்கம் இரண்டு அறைகள் செருப்புக் கடைக்காரர்கள் வசம் இருந்தன. அவர்கள் இன்னும் அதை விடவில்லை; அதற்காக வீட்டுக்காரனுடன் சண்டை போட வேண்டும். இவற்றையெல்லாம் அவனே கவனிக்காவிட்டால் ஆகாது. இதை எண்ணும்போது இந்தக் கவலையும் மற்றவைகளோடு கலந்து சோர்வை இன்னும் அதிகரிக்கச் செய்தது. மாடிப் படியருகில் நின்று மகேந்திரன் சற்றுச் சமாளித்

துக்கொண்டான். விநோதினியிடம் அவன் கொண்டிருந்த காதல் அவனை ஆத்திரப்படச் செய்தது. 'இத்தனை காலமாக உலகை மறந்து நாம் விரும்பியவளை இன்று அடைந்து விட்டோம். இனி இருவரிடையே தடையேதும் இல்லை; இன்று களியாட்டத்திற்குரிய நாள்' என்று அவன் தன்னைத் தேற்றிக்கொண்டான். ஆனால் தடையொன்றும் இராமல் இருப்பதே பெரிய தடங்கல் ஆயிற்றே! மகேந்திரனுடைய மனமே அவனுக்குத் தடையாக நிற்குமே!

தெருவில் மகேந்திரனைக் கண்ணுற்றதுமே விநோதினி தன் தியானத்தை விட்டு எழுந்து உள்ளே விளக்கேற்றினாள். பின்னர்க் கம்பளி நூலை எடுத்துக்கொண்டு அதில் கவனத்தைச் செலுத்தினாள். இந்தப் பின்னல் வேலை அவளுக்கு ஒரு மறைவு; அதன் பின்னே அவளுக்கு ஒரு புகலிடம் இருந்தது.

மகேந்திரன் உள்ளே நுழைந்தான். ''விநோத்! இங்கு உனக்கு அசௌகரியம் அதிகமாக உண்டு, இல்லையா'' என்றான்.

பின்னலில் ஈடுபட்டவாறு விநோதினி, ''அப்படி எதுவும் இல்லை'' என்றாள்.

''இன்னும் இரண்டு மூன்று நாட்களில் தேவையான பொருள்கள் எல்லாம் வந்துவிடும். இந்தச் சில நாட்கள் நீ கஷ்டங்களைப் பொறுத்துக்கொள்ள வேண்டியிருக்கும்.''

''அதெல்லாம் எதுவும் வேண்டாம். நீங்கள் எந்த ஏற்பாடும் செய்யத் தேவை இல்லை. இங்கு இருப்பதே என் தேவைக்கு மேற்பட்டது.''

''இந்த ஏழையும் தேவைக்கு அப்பாற்பட்டவன்தானா!''

''தன்னைப்பற்றி அவ்வளவு அதிகம் எண்ணிக்கொள்வது கூடாது. கொஞ்சம் பணிவு இருப்பது நல்லது.''

தனிமையில் விளக்கொளியில் குனிந்த தலையுடன் வேலையில் ஈடுபட்டிருந்த விநோதினியின் தன்னடக்கமான தோற்றம் கணப்பொழுதில் மகேந்திரனுக்கு மீண்டும் பழைய வெறியை ஊட்டியது. வீட்டில் இருந்தால் ஓட்டமாக வந்து அவள் காலடியில் விழுந்திருப்பான். ஆனால் இதுவோ வீடல்ல; ஆகவே, அவனால் அவ்வாறு செய்ய முடியவில்லை. விநோதினிக்கு வேறு கதியில்லை. அவனுடைய கைகளுக்கு உட்பட்டு இருந்தாள்; இந்த வேளையில் சற்றுப் பொறுத்துக் கொள்ளாமல் இருப்பது கோழைத்தனமாகும்.

''உங்கள் துணி, புஸ்தகங்களை இங்கு ஏன் கொண்டு வந்தீர்கள்?'' என்றாள் விநோதினி.

''அவை அவசியமென்று எனக்குத் தோன்றுகிறது. தேவைக்கு அப்பாற்பட்டது என்று அவைகளைச் சொல்ல முடியாது.''

''அது தெரியும். ஆனால் இங்கு அவை எதற்கு?''

''அதுவும் சரிதான். அவசியமானது எதுவும் இங்கு எடுக்காது. விநோத்! புஸ்தகங்களை எல்லாம் தெருவில் வீசி எறிந்துவிடு. எனக்கு ஒருவித ஆட்சேபமும் இல்லை. ஆனால் அவைகளுடன் என்னையும் வீசி விடாதே!'' என்றதும் அவன் சற்று நகர்ந்து வந்து துணியில் சுற்றியிருந்த புஸ்தக மூட்டையை விநோதினியின் காலருகில் போட்டான்.

விநோதினி பின்னல் வேலையில் ஈடுபட்டவாறு தலை தூக்காமல் அழுத்தமாக, ''மகேந்திர பாபு! இங்கு நீங்கள் தங்குவது நடக்காது'' என்றாள்.

அப்போது தான் கொண்டிருந்த ஆவலுக்கு எதிர்த் தாக்குதல் வரவே மகேந்திரன் பரபரப்படைந்தான். ''ஏன் விநோத்! என்னை ஏன் விலக்கித் தள்ளப் பார்க்கிறாய்? உனக்காக எல்லாவற்றையும் துறந்ததற்குப் பலன் இதுதானா?'' என்று குரல் குழறச் சொன்னான்.

''என் பொருட்டு நீங்கள் எல்லாவற்றையும் துறக்கும் படி நான் விடமாட்டேன்.''

''இனி, அது உன் கையில் இல்லை. குடும்பத்தில் எல்லாம் என்னைவிட்டு நழுவிவிட்டன. நீ மட்டுந்தான் இன்று இருக்கிறாய், விநோத்! விநோத்!'' என்று மகேந்திரன் கீழே விழுந்து அவளுடைய கால்களைப் பிடித்துக்கொண்டு திரும்பத் திரும்ப முத்தமிடலானான்.

விநோதினி கால்களை விடுவித்துக்கொண்டு எழுந்து சொன்னாள்: ''மகேன்! நீங்கள் என்ன சபதம் செய்தீர்கள், நினைவிருக்கிறதா?''

தன் முழுப் பலத்தையும் உபயோகித்துத் தன் நிலைக்கு வந்து மகேந்திரன், ''நினைவிருக்கிறது. உனக்கு எப்படி இஷ்டமோ அவ்வாறு இருக்கலாம், அதற்கு மாறாக நான் எதுவும் செய்யமாட்டேன் என்று சபதம் செய்தேன். அதையே உறுதியாகக் கடைப்பிடிப்பேன். என்ன செய்யவேண்டும், சொல்'' என்றான்.

''நீங்கள் உம் வீட்டில் போய் இருக்க வேண்டும்.''

''நான் மட்டுந்தான் உனக்கு வேண்டாத பொருளாகி விட்டேனா, விநோத்! அவ்வாறு இருந்தால் என்னை இழுத்து வரக் காரணம் என்ன? உன் களிப்புக்கு நான் தகுதியற்றவன் என்றால், என்னை வேட்டையாட வேண்டிய அவசியந்தான் என்ன? உண்மையாகச் சொல். நானாக ஆசைப்பட்டு உன்னிடம் வந்து சிக்கினேனா, அல்லது நீ வேண்டுமென்று என்னைப் பிடித்துக்கொண்டாயா? என்னை இவ்வாறு விளையாட்டுப் பொம்மையாக வைத்து விளையாடுவதையும் நான் பொறுத்துக்

கொள்ள வேண்டுமா? அப்படியே இருக்கட்டும். நான் சபதத்தை நிறைவேற்றுவேன். எனக்கென்று இருந்த இடத்தைக் காலால் உதைத்துச் சிதைத்துவந்த அந்த வீட்டுக்கே போய் நான் இருக்கிறேன்.''

விநோதினி மீண்டும் தரையில் உட்கார்ந்து பின்னல் வேலையைத் தொடங்கினாள். மகேந்திரன் சற்று நேரம் அவள் முகத்தையே உற்று நோக்கியபின், ''விநோத்! நீ ரொம்பக் கொடியவள். நான் துரதிருஷ்டசாலி. உன்னையும் காதலித்தேன், பார்'' என்றான்.

பின்னலில் தவறு செய்துவிடவே, விநோதினி விளக்கின் முன்னால் அதைப் பிடித்து, மிகவும் கவனத்துடன் அதைப் பிரித்தாள். விநோதினியின் கல்நெஞ்சைத் தன் வலுவான கரங்களால் நசுக்கிச் சிதைத்துவிடலாமா என்று மகேந்திரனுக்குத் தோன்றியது. மௌனமான இந்தக் கடுமை, தயங்காத அவமதிப்பு இவைகளைத் தன் கைப் பலத்தினால் தோல்வியுறச் செய்யலாமா என்றிருந்தது அவனுக்கு.

உள்ளிருந்து வெளியே வந்த அவன் மீண்டும் உள்ளே சென்றான். ''நான் இராவிட்டால், தனியே இருக்கும் உன்னைப் பார்த்துக்கொள்ள யார் இருக்கிறார்கள்?'' என்றான்.

''அதற்காக நீங்கள் கவலைப்படவேண்டியதில்லை. க்ஷேமியை அத்தை அனுப்பிவிட்டாள். இன்று அவள் என்னிடம் வந்து வேலையை ஒப்புக்கொண்டாயிற்று. வாசல் கதவைத் தாழிட்டுக்கொண்டு நாங்கள் இரண்டு பேருமாக இருந்துகொள்வோம்.''

மனத்தினுள் கோபம் பொங்கப் பொங்க, மகேந்திரனுக்கு விநோதினியின்மேல் இருந்த காதலின் தீவிரமும் அதிகரித்தது. அசையாத அந்த உருவை முழுப் பலத்துடன் மார்பில் அழுத்திப் பிடித்துக் கசக்கிப் பிழியலாமா என்றிருந்தது அவனுக்கு. இந்தக் கொடிய ஆவலை அடக்கிக்கொள்ள அவன் வீட்டை விட்டு ஓட்டமாக வெளியேறினான்.

தெருவில் சுற்றும்போது, விநோதினி காட்டும் அலட்சியத்துக்குப் பதிலாகத் தானும் அவமதிப்புக் காட்ட வேண்டும் என்று அவன் உறுதி கொண்டான். உலகில் அவளுக்கு ஒரே புகலிடம் மகேந்திரன்தான் என்று இருக்கும் நிலையில், அவனை இப்படி அலட்சியமாக, அஞ்சாமல் உறுதியாகத் தள்ளிவிட்டாள் விநோதினி! இவ்வளவு பெரிய அவமானம் எந்த ஆண் மகனுடைய அதிர்ஷ்டத்திலாவது நடந்திருக்குமா? கர்வம் பொடியான பின்னரும் அது ஒரேயடியாகப் போய்விடவில்லை; ஆனால் வேதனையில் பட்டு உழலத் தொடங்கியது. 'நான் அவ்வளவு கேடு கெட்டவனா? என் விஷயத்தில் இவ்

வளவு துணிச்சல் அவளுக்கு எங்கிருந்து வந்தது? என்னைத் தவிர அவளுக்கு வேறு யார் இருக்கிறார்கள்?' என்று எண்ணமிட்டான் அவன்.

இவ்வாறு அவன் யோசிக்கையில் திடீரென்று அவனுக்கு நினைவு வந்தது. 'விஹாரி!' - ஒரு கணம் அவனுடைய மார்பில் இரத்த ஓட்டமே நின்றுவிட்டாற்போலத் தோன்றியது. "விஹாரியைத்தான் விநோதினி நம்பி இருக்கிறாள். நான் அதற்கு ஒரு துணைபோலத்தான். நான் அவள் கால் வைத்துக் கொள்ள ஒரு படிக்கட்டு மாத்திரமே. ஒவ்வோர் அடியிலும் மிதிபடும் இடமே எனக்கு. அந்தத் துணிவினால்தான் என்னை அவமதிக்கிறாள் அவள்! விஹாரிக்கும் விநோதினிக்கும் ஏதாவது கடிதப் போக்குவரத்து இருக்குமோ? அவனிடமிருந்து ஆறுதல் கடிதம் ஏதாவது அவளுக்கு வந்திருக்குமோ?' என்ற ஐயம் மகேந்திரனுக்கு உண்டாயிற்று.

அவன் உடனே விஹாரியின் வீட்டுக்குச் சென்றான். அவன் வீட்டுக் கதவைத் தட்டியபோது இரவு வெகு நேரமாகி இராது. பல தடவை தட்டிய பிறகு வேலைக்காரன் உள்ளிருந்து கதவைத் திறந்து, "பாபு வீட்டில் இல்லை" என்றான்.

மகேந்திரனுக்குத் தூக்கிப் போட்டது: 'நான் முட்டாளைப்போல் தெருத் தெருவாக அலைகிறேன். அந்த வேளையில் விஹாரி விநோதினியிடம் சென்றிருக்கிறான். இதனால்தான் அவள் இந்த இராத்திரிப் பொழுதில் சற்றும் தயை இராமல் என்னை அவமானம் செய்திருக்கிறாள். நானும் துரத்திவிட்ட கழுதைபோல் ஓடிவந்துவிட்டேன்' என்று எண்ணினான்.

மகேந்திரன் மறுபடியும் தனக்குப் பழக்கமான அந்த வேலையாளைக் கேட்டான்: "பஜ்ஜு, பாபு எப்போது வெளியே போனார்?"

"நாலைந்து நாளாகிறது. அவர் எங்கோ மேற்கே ஊர் சுற்றப் போயிருக்கிறார்" என்றான் பஜ்ஜு.

இதைக் கேட்டதும் மகேந்திரனுக்கு மூச்சு வந்தது. 'இனிச் சற்று நிம்மதியாகத் தூங்கலாம். ராத்திரி பூராவும் சுற்ற என்னால் ஆகாது' என்று அவன் மாடியில் விஹாரியின் அறையில் சோபாவில் படுத்து மறு கணமே உறங்கினான்.

முன்பு மகேந்திரன் வந்து வீட்டில் கலவரம் எழுப்பிவிட்டுச் சென்றதும், மறு நாள் விஹாரி எங்குச் செல்வது என்று தீர்மானம் இன்றி மேற்கே யாத்திரை கிளம்பிவிட்டான். 'இங்கு இருந்தால் பழகிய நண்பனுடன் சிக்கல் பயங்கரமான அளவுக்கு வளர்ந்துவிடும். வாழ்நாள் முழுமைக்கும் எண்ணி வருந்த நேரிடலாம்' என்று விஹாரிக்குத் தோன்றியதன் விளைவுதான் இது.

மறு நாள் மகேந்திரன் கண் விழித்தபோது மணி பதினென்ருகிவிட்டது. 'எழுந்ததுமே எதிரே இருந்த சிறு மேஜையின்மேல் அவன் பார்வை சென்றது. விநோதினியின் கையெழுத்தில் விஹாரியின் பெயருக்கு ஒரு கடிதம் பறந்து விடாமல் இருக்க ஒரு கல்லின்கீழ் இருப்பது தெரிந்தது. பரபரப்புடன் அவன் அதை எடுத்தான். பிரிக்கப்படாமல் இருந்தது அந்தக் கடிதம். வெளியூர் சென்றிருந்த விஹாரிக்காகக் காத்திருந்தது அது. மகேந்திரன் கைகள் நடுங்க அதைப் பிரித்துப் படிக்கலானன். இந்தக் கடிதம் விநோதினி ஊரில் இருந்தபோது எழுதியதாகும். இதற்குத்தான் அவளுக்குப் பதில் எதுவும் கிடைக்கவில்லே.

கடிதத்தின் ஒவ்வோர் எழுத்தும் அவனேப் பிடுங்கின. இளமை முதல் விஹாரி எப்போதும் அவனுக்குப் பின்னலேயே நின்று இருந்தவன். உலகில் அன்பும் காதலும் மகேந்திர தேவதைக்குக் கிடைத்தபின் காய்ந்த சருகுகளே அவனுக்குக் கிடைக்கும். இன்ருே, மகேந்திரன் வேண்டி நிற்க, விஹாரியோ வெறுக்கிருன். ஆனல் இவனே ஒதுக்கி விஹாரியை விநோதினி அண்டிச் செல்லக் காரணம் என்ன? மகேந்திரனுக்கும் இரண்டு கடிதம் எழுதியிருந்தாள் விநோதினி. ஆனல் விஹாரிக்கு எழுதியிருந்த கடிதத்தின் முன்னர் அவை வெறும் வேஷம்; முட்டாளே ஏமாற்றுவதற்காக எழுதியதென்றே தோன்றியது.

புது விலாசத்தைத் தெரிவிக்க ஊர்த் தபாலாபீசுக்குத் தன்னே அனுப்ப விநோதினி அவசரப்பட்டது மகேந்திரனுக்கு நினைவு வந்தது. அதன் காரணமும் அவனுக்கு விளங்கியது. விநோதினி முழு நம்பிக்கையுடன் விஹாரியின் பதிலே எதிர் பார்த்துக் கிடக்கிருள் என்று அவன் உணர்ந்தான்.

முன் பழக்கப்படி எஜமானர் இராவிட்டாலும் பஜு மகேந்திரனுக்குத் தேநீரும், கடைத் தெருவிலிருந்து சிற்றுண்டியும் கொணர்ந்து கொடுத்தான். மகேந்திரன் குளிப்பதற்கு மறந்தான். கொதிக்கும் மணலின்மேல் வேகமாக ஓடும் பிரயாணிபோல், மகேந்திரன் ஒவ்வொரு கணமும் தனக்கு எரிச்சலேத் தந்த விநோதினியின் கடிதத்தின்மேல் பார்வையைச் செலுத்தினன். இனி அவளேச் சந்திக்கவே கூடாது என்று ஒரு சமயம் அவனுக்குத் தோன்றியது. ஆனல் இன்னும் இரண்டு நாள் கழித்து கடிதத்திற்குப் பதில் வரா விட்டால் விநோதினி விஹாரியின் வீட்டுக்கு வருவாள்; விஷயம் தெரிந்ததும் ஆறுதல் அடைவாளல்லவா! அதுவுங் கூட அவனுக்குப் பொறுக்கவில்லே.

அவன் கடிதத்தைப் பையில் போட்டுக்கொண்டு இருட்டுவதற்குச் சற்றுமுன் படல்டாங்கா வீட்டுக்கு வந்துசேர்ந்தான்.

மகேந்திரனின் வாடிய முகத்தைக் கண்டு விநோதினிக்கு மனம் இளகியது. முதல் நாள் இரவைத் தெருவிலேயே உறங்காமல் கழித்திருப்பான் என்று ஊகித்துக்கொண்டாள்.

''நேற்று இரவு வீட்டுக்குப் போகவில்லையா?''

''இல்லை.''

விநோதினி பரபரப்படைந்தாள். ''இன்று, இன்னும் சாப்பிடக்கூட இல்லையா?'' என்று அவள் பணிவிடை செய்ய முற்பட்டாள்.

''கிடக்கிறது. நான் சாப்பிட்டாயிற்று.''

''எங்கே சாப்பிட்டீர்கள்?''

''விஹாரியின் வீட்டில்.''

கணப்பொழுது விநோதினியின் முகம் வெளுத்தது. சற்று நேரம் கம்மென்று இருந்தபின் அவள் சமாளித்துக்கொண்டு, ''விஹாரி பாபு சுகந்தானே?'' என்றாள்.

''சுகந்தான். விஹாரி மேற்கே ஊர் சுற்றப் போய் விட்டான்.'' விஹாரி அன்றைக்குத்தான் ஊர் சுற்றக் கிளம்பியிருக்கிறான் என்ற தோரணையில் மகேந்திரன் இதைச் சொன்னான்.

மீண்டும் ஒரு முறை விநோதினியின் முகம் வெளுத்தது. மறுபடியும் அவள் சுதாரித்துக்கொண்டாள்: 'இப்படியும் ஒரு நிலையற்ற மனிதரை நான் கண்டதில்லை. நம் விஷயமெல்லாம் தெரிந்துவிட்டிருக்கும். அவருக்கு ரொம்பக் கோபமோ?' இராவிட்டால், இந்தக் கொளுத்தும் வெயிலில் மேற்கே போக எவனுக்குத்தான் ஆசை பிறக்கும்?

''என்னைப்பற்றி ஏதாவது சொன்னாரா?'' என்றாள்.

''சொல்ல என்ன இருக்கிறது? இந்தா விஹாரியின் கடிதம்'' என்று அவன் கடிதத்தை அவளிடம் கொடுத்து விட்டு அவளுடைய முகபாவத்தை உற்றுக் கவனிக்கலானான்.

விநோதினி பரபரப்புடன் கடிதத்தை எடுத்தாள்: கடிதத்தின் உறையின்மேல் அவள் கையெழுத்தில் விஹாரியின் பெயர் தெரிந்தது. உறையிலிருந்து எடுத்த கடிதமும் அவள் விஹாரிக்கு எழுதியதுதான். திருப்பித் திருப்பிப் பார்த்தும், விஹாரியின் பதில் ஏதும் அதில் இல்லை.

சற்று மௌனத்திற்குப் பின் அவள், ''நீங்கள் கடிதத்தைப் பார்த்தீர்களா?'' என்றாள்.

விநோதினியின் முகமாறுதல் அவனுக்கு உள்ளூற ஓர் அச்சத்தை மூட்டியது. அவன் சட்டென்று ஒரு பொய்யைச் சொன்னான்: ''இல்லையே!''

விநோதினி கடிதத்தைச் சுக்கல்களாகக் கிழித்துச் சாளரத்துக்கு அப்பால் எறிந்தாள்.

"நான் வீட்டுக்குப் போகிறேன்" என்றான் மகேந்திரன். விநோதினி அவனுக்குப் பதில் ஏதும் சொல்லவில்லை.

"நீ விரும்பியபடியே நான் செய்கிறேன். ஏழு நாள் நான் வீட்டில் இருக்கிறேன். காலேஜுக்குப் போகும்போது தினமும் இங்கு வேண்டியதை ஏற்பாடு செய்து க்ஷேமியிடம் கொடுத்து விடுகிறேன். உன்னைக் கண்டு உனக்கு எரிச்சல் மூட்ட மாட்டேன்."

மகேந்திரன் சொன்னது ஏதாவது அவள் காதில் விழுந்ததோ இல்லையோ தெரியாது. அவள் பதில் ஒன்றும் சொல்லவில்லை. திறந்த சாளரத்தின் மூலம் வெளியே தெரியும் இருண்ட வானத்தை நோக்கியவாறு நின்றாள் விநோதினி.

மகேந்திரன் தன் உடைமைகளை எடுத்துக்கொண்டு வெளியேறினான்.

தனிமையான அறையில் வெகு நேரம் பித்துப் பிடித்தது போல் உட்கார்ந்திருந்த பின்னர் அவள் தன்னைப் பழைய நிலைக்குக் கொண்டுவர மார்புத் துணியைக் கிழித்துப் பலமாக அடித்துக்கொள்ளத் தொடங்கினாள். க்ஷேமி ஓசை கேட்டுப் பரபரப்புடன் ஓடி வந்தாள். "அம்மா! இதென்ன செய்கிறீங்க?" என்றாள்.

"நீ இங்கிருந்து போ!" என்று கூச்சலிட்டு அவளை விரட்டினாள் விநோதினி. அதன் பின் கதவைப் படீரென்று அடைத்துக் கைமுட்டியைக் குவித்துக்கொண்டு தரையில் விழுந்து, அம்பு பட்ட மான் போல் நடுக்கத்துடன் முனகினாள். இவ்வாறு தன்னைத் தண்டித்துக்கொண்ட அவள் சோர்ந்து மயங்கியவளாய்த் திறந்த சாளரத்தின் அடியிலேயே இரவெல்லாம் கிடந்தாள்.

காலையில் கதிரவன் ஒளி உள்ளே நுழையவும், அவளுக்குத் திடீரென்று ஓர் ஐயம் பிறந்தது:'விஹாரி ஊருக்குப் போகாமல் இருந்திருந்தால் - ? மகேந்திரன் அவளை ஏமாற்றப் பொய் சொல்லியிருக்கலாம்! அவள் உடனே க்ஷேமியை அழைத்தாள். "க்ஷேமி, இப்போதே நீ விஹாரி பாபுவின் வீட்டுக்குப் போய் அவரைப்பற்றி விசாரித்து வா" என்றாள்.

ஒரு மணி நேரத்துக்குள் க்ஷேமி திரும்பிச் சொன்னாள்: "விஹாரி பாபு வீட்டில் ஜன்னல், கதவு எல்லாம் மூடியிருக்கின்றன. கதவைத் தட்டினேன். வேலைக்காரன் உள்ளிருந்து வந்தான். 'பாபு ஊரில் இல்லை. மேற்கே யாத்திரை போயிருக்கிறார் என்றான்.' "

விநோதினியின் மனத்தில் இதற்குமேல் சந்தேகம் எழக் காரணமே இல்லை.

41

இரவே மகேந்திரன் படுக்கையை விட்டு எழுந்து சென்றுவிட்டான் என்று தெரிந்ததும் ராஜலட்சுமிக்கு மருமகள் பேரில் ஆத்திரம் பிறந்தது. ஆசாவின் தொந்தரவு தாங்காமல்தான் மகேந்திரன் போய்விட்டானென்று அவள் எண்ணி ஆசாவைக் கேட்டாள்: ''அவன் நேற்று ராத்திரி ஏன் போனான்?''

ஆசா தலை குனிந்தாள். ''எனக்குத் தெரியாது, அம்மா.''

இதுவும் ரோஷத்தில் சொல்லும் வார்த்தையென்றே கருதினாள் ராஜலட்சுமி. வெறுப்புடன் அவள், ''உனக்குத் தெரியாமல் வேறு யாருக்குத் தெரியும்? அவனை ஏதாவது சொன்னாயா?'' என்றாள்.

''இல்லை'' என்றுமட்டுமே ஆசா பதிலளித்தாள்.

ராஜலட்சுமி அதை நம்பவில்லை. ''இப்படியும் நடக்குமா? ''நேற்று மகேன் எப்போது போனானடி?'' என்றாள்.

ஆசா கூச்சத்துடன், ''அதுவும் எனக்குத் தெரியாது'' என்றாள்.

ராஜலட்சுமிக்குக் கோபம் அதிகரித்தது. ''உனக்கு ஒன்றுமே தெரியாது, பாவம்; பச்சைக் குழந்தை! எல்லாம் வேஷமடி, வேஷம், பாசாங்கு!''

ஆசாவின் சுபாவமும், நடத்தையுமே மகேந்திரனை வீட்டைவிட்டு ஓடச் செய்யக் காரணம் என்பதையும் ராஜலட்சுமி உரத்த குரலில் கூறிவிட்டாள். ஆசா குனிந்த தலை நிமிராமல் அந்த வசவுகளை எல்லாம் சுமந்து பின்னர்த் தன் அறைக்குள் வந்து அழுதாள்: 'அவர் ஏன் என்னை ஒரு நாள் நேசித்தாரோ அது எனக்குத் தெரியாது! இப்போது அவர் காதலை மீண்டும் பெற வழி என்ன என்பதும் எனக்குத் தெரியவில்லை' என்று அவள் உள்ளூறக் கவலைப்பட்டாள். தன்னை விரும்பும் மனிதரை எவ்வாறு மகிழ்விப்பது என்று இதயமே வழி காட்டுகிறது. ஆனால் தன்னைக் காதலிக்காத ஒருவருடைய மனத்தை அடைய வழி என்ன என்று ஆசாவுக்கு எப்படித் தெரியும்? இன்னொருத்தியை நேசிக்கும் ஒருவரை அணுகி அவரிடம் ஆதரவு பெறும் அளவுக்கு வெட்கக்கேடான செய்கையை அவள் எவ்வாறு செய்வாள்?

இருட்டும் வேளையில் வீட்டுச் சோதிடரும் அவருடைய தங்கை குருதேவியும் வந்திருந்தனர். மகனுடைய கிரக தோஷத்திற்குச் சாந்தி செய்ய அவர்களை ராஜலட்சுமி அழைத்திருந்தாள். ராஜலட்சுமி மருமகளின் ஜாதகத்தையும்,

கைரேகைகளையும் பார்க்கும்படி சோதிடரிடம் கேட்டுக் கொண்டாள். ஆசாவையும் அங்கு வரவழைத்தாள்.

பிறரிடம் தனது துரதிருஷ்டத்தை எடுத்துக் கூறுவது ஆசாவுக்கு மானக் குறைவாகத் தோன்றியது. அவள் ஏதோ ஒருவாறு தன் கையை நீட்டும் சமயம் ராஜலட்சுமிக்கு, பக்கத்து வராந்தாவின் இருளில் மெதுவாகச் செருப்பின் ஓசை கேட்டது. யாரோ ரகசியமாகப் போகும் சப்தம் அது. ராஜலட்சுமி, ''யாரங்கே?'' என்றாள்.

முதலில் பதில் ஏதும் வரவில்லை. அவள் மீண்டும், ''யார் போவது அங்கே?'' என்றதும் வாய் திறவாமல் மகேந்திரன் உள்ளே நுழைந்தான்.

மகேந்திரன் கூசிச் சாவது கண்டு ஆசாவுக்கும் அவமானமாக இருந்தது. சொந்த வீட்டிலேயே திருடனைப் போல் நடக்கவேண்டி வந்துவிட்டதே, மகேந்திரனுடைய நிலைமை! சோதிடரும் அவருடைய தங்கையும் வேறு உட்கார்ந்திருப்பது அவளுக்குப் பின்னும் வெட்கமாக இருந்தது. புருஷனுக்காக உலகில் எங்கும் கூச்சப்பட வேண்டியிருக்கிறதே என்ற அவமானம் ஆசாவுக்குத் துக்கத்தைவிட அதிகமாக இருந்தது. ராஜலட்சுமி மெதுவாக, ''அம்மா! பார்வதியிடம் சொல்லு: மகேனுக்குச் சாப்பாடு கொண்டுவரட்டும்'' என்றபோது ஆசா, ''அம்மா, நானே கொண்டு வருகிறேன்'' என்றாள். வீட்டு வேலைக்காரிகளின் பார்வையிலிருந்தும் அவள் மகேந்திரனை மூடிக் காப்பாற்ற முனைந்தாள்.

புரோகிதரையும் அவருடைய தங்கையையும் கண்டு மகேந்திரனுக்கு உள்ளூறக் கோபம் வந்தது. தன் தாயும் மனைவியுமாகத் தெய்வத்தின் துணையோடு தன்னை வசப்படுத்த இந்தப் படித்தறியாத மூடர்களுடன் சேர்ந்து கூச்சமின்றிச் சூழ்ச்சி செய்வது மகேந்திரனுக்குப் பொறுக்க முடியவில்லை. அதிலும் சோதிடரின் தங்கை குரலில் அளவுக்கு மிஞ்சின அன்பு ஒழுக, ''சுகமாக இருக்கிறாயா, அப்பா!'' என்று கேட்டதும், அவனால் உட்கார்ந்திருக்க முடியவில்லை. அந்தக் கேள்விக்குப் பதில் அளிக்காமல் அவன், ''அம்மா, நான் மேலே போகிறேன்'' என்றான்.

படுக்கை அறையில் அவன் தன் மனைவியுடன் ஏதோ தனியாகச் சொல்ல நினைப்பதாக ராஜலட்சுமி எண்ணினாள். உடனே மிகவும் களிப்புடன், பரபரவென்று சமையலறையில் இருந்த ஆசாவிடம் சென்றாள். "போடீ, போ! சீக்கிரமாக மேலே போ! மகேனுக்கு ஏதோ அவசரமாக வேண்டியிருக்கிறதோ என்னவோ?'' என்றாள்.

ஆசா மார்பு திக்திக்கென்று அடித்துக்கொள்ளக் கூசிக்

கொண்டே மாடிக்குச் சென்ருள். மாமியார் சொன்னதைக் கேட்டு அவள் மகேந்திரன் தன்னை அழைத்ததாகவே எண்ணிக் கொண்டாள். ஆனல் அறையினுள் சட்டென்று நுழைய அவளால் முடியவில்லை. நுழையுமுன்னர் இருளில் கதவின் மறைவில் நின்று மகேந்திரனைப் பார்த்தாள்.

மகேந்திரன் அப்போது வறண்ட உள்ளத்துடன் கீழே படுக்கையில் சாய்ந்து உட்கார்ந்து மேலே உத்தரத் துண்டுகளை எண்ணியவாறு இருந்தான். அதே மகேந்திரன்தான்; எல்லாம் முன் இருந்தபடியேதான் இருந்தன. ஆனல் எவ்வளவு மாறுதல் அவனிடம்! இந்தச் சிறு படுக்கையறையை ஒரு காலத்தில் மகேந்திரன் சொர்க்கம் ஆக்கிக்கொண்டிருந்தான். இன்று அந்தக் களிப்பின் தூய நினைவை ஏனே அவன் அவமதிக்கிருன்! இத்தனை கஷ்டம், வெறுப்பு, அலைச்சல் இருந்தால் ஏன் இந்தப் படுக்கையில் உட்காரவேண்டுமோ! எவ்விதத்திலும் நிறைவு பெற்ற அந்த இரவுகள், தனிமையில் கழிந்த பகற்பொழுதுகள், தன்னை மறந்து வேலையற்றுக் கழித்த மழை நாட்கள், தென்றல் காற்றில் மெய்ம்மறந்து கழித்த இளவேனிலின் அந்தி வேளைகள், ஓயாது பேசிய எண்ணற்ற வார்த்தைகள் - இவை இங்கு வந்தும் உனக்கு நினைவிராவிடில்...? இவ்வீட்டில் இன்னும் எத்தனையோ அறைகள் உள்ளன; இந்த அறையில் இனிக் கணமும் தங்க உனக்கு உரிமையில்லை, மகேன்!

இருளில் ஆசா நின்று அவனையே உற்று நோக்கும்போது இப்போதுதான் அவன் விநோதினியிடமிருந்து வருகிருன் என்று தோன்றியது. அவனுடைய உடலில் விநோதினியின் பரிசமும், அவனுடைய விழிகளில் விநோதினியின் உருவமும், செவியில் அவளுடைய குரலும், அவன் உள்ளத்தில் விநோதினியின் ஆசையும் ஒட்டிக்கொண்டிருந்தன. அவனுடன் அவள் ஒன்றிவிட்டிருப்பதாகவே அவள் கருதினுள். இந்த மகேந்திரனிடம் அவள் எவ்வாறு தூய அன்பைச் சொரிவது? முழு மனத்துடன், 'வாருங்கள்; உங்களைத் தவிர வேறு எவரையும் எண்ணுத என் இதயக் கோயிலில் அமருங்கள்; அசைவற்ற பதிவிரதையின் அன்பென்னும் வெண்தாமரையின்மேல் உங்கள் பாதங்களை வையுங்கள்' என்று எவ்வாறு அவனை அழைப்பது? பெரியம்மாவின் புத்திமதி, புராணக் கதைகள், சாஸ்திரங்களின் கட்டளை எதையும் அவளால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. காதலின்ப வானிலிருந்து நழுவிய மகேந்திரனுக்கு உள்ளக் கோயிலில் தேவதைக்குரிய இடமளிக்க அவள் மனம் ஒப்பவில்லை. அவன் விநோதினியின் மாசுக் கடலில் தன் இதய தேவதையைப் பறி கொடுத்து விட்டான். காதலின் அன்பு நிறைந்த அந்த இரவின் இருளில் அவளுடைய செவி

களிலும், இதயத்திலும், மூளைக்குள்ளும், உதிரப் பெருக்கிலும் சுற்றியுள்ள உலகு எங்கிலும், வானின் விண்மீன்களிலும், சுற்றிச் சுவர் சூழ்ந்த மாடியிலும், படுக்கையறையின் பிரிவுப் படுக்கையிலும் எங்கும் பயங்கரமான துயர கீதம் ஒன்று ஆழ்ந்து ஒலித்தது.

விநோதினிக்குரிய மகேந்திரன் ஆசாவுக்கு வேற்று மனிதன்தானே! அதையும்விட அதிகமென்றே சொல்லலாம். இந்த வெட்கக் கேடான விஷயம் அப்படிப் புதியதும் இல்லை. அவளால் அறையினுள் நுழையவும் முடியவில்லை.

மகேந்திரனின் பார்வை மெல்லக் கூரையிலிருந்து சுவ்ரில் இறங்கியது. அவன் பார்வையை ஒட்டித் தானும் கவனித்தாள் ஆசா. எதிரே சுவரில் மகேந்திரனின் படத்தையொட்டி ஆசாவின் படம் ஒன்று தொங்கியது. அதைத் தலைப்பினுல் மூடி எடுத்து வந்து கிழித்து எறியலாம்போல் இருந்தது அவளுக்கு. பழக்கம் காரணமாக அது ஏனோ அவள் கண்களில் படவில்லை! அதை வேறு எங்காவது ஏனோ வைக்காமல் போனேம் என்று அவள் தன்னையே நொந்துகொண்டாள். மகேந்திரன் அதைக் கண்டு தனக்குள் சிரித்துக்கொள்வான்: அவனுடைய உள்ளத்தில் இருக்கும் விநோதினியின் உருவமும் அவனுடைய இமைகளின் வழியாக அந்தப் படத்தை கேலிச் சிரிப்புடன் நோக்குவதாகவே அவளுக்குப் பட்டது.

கடைசியில் வெறுப்புடன் மகேந்திரன் சுவரிலிருந்து தன் பார்வையை நகர்த்தினுன். ஆசா தன் மூடத்தனத்தை விலக்கும் பொருட்டுச் சாயங்கால வேளைகளில் மாமியின் பணிவிடை, வீட்டு வேலை யாவும் ஓய்ந்த பின்னர் இரவு வெகு நேரம் வரையில் தனிமையில் படிப்பது வழக்கமாக இருந்தது. அவள் படிக்கும் புத்தகங்கள் யாவும் அறையின் மூலையில் ஒரு பக்கமாகக் கிடந்தன. திடீரென மகேந்திரன் சோம்பலுடன் அவைகளில் ஒன்றை எடுத்துப் பிரித்துப் பார்த்தான். கூக்குரலிட்டு ஓடிச் சென்று அதைப் பிடுங்கலாமென்று ஆசாவுக்குத் தோன்றியது. படியாத கையெழுத்தில் அவள் கோணல் மாணலாக எழுதியிருப்பதை மகேந்திரன் கல்நெஞ்சுடன் கேலியாகப் பார்ப்பதாக எண்ணினுள். அவளால் அங்கே கணமும் இருக்க முடியவில்லை. வெகு விரைவாகக் கீழே ஓடினுள்; தூல் ஓசையை அடக்கும் எண்ணங்கூட அவளுக்குத் தோன்றவில்லை.

மகேந்திரனுடைய உணவு தயாராக இருந்தது. மகேந்திரன் மனைவியுடன் ஏதோ ரகசியமாகப் பேசுவதாக ராஜலட்சுமி எண்ணியிருந்தாள். அதனுல்தான் உணவை எடுத்துச்